# விடுதலைப்புலிகள்

குரல்: 77 புரட்டாதி - ஐப்பசி - 1997 அன்பளிப்பு: 5/-



உள்ளே

★ சந்திரிகா அரசாங்கத்தின் அரசியல்நியூத்திரன் குண்டுகள்
★ ஜயசிக்குறுய் சமரும் புளியங்குள சண்டைகளும்
★ இருட்டை வரைபவர்கள்
★ ஜயசிக்குறுய் நடவடிக்கையை புலிகள் எவ்விதம் எதிர்கொள்கின்றனர்
★ சேகுவேரா திரும்பி வந்துவிட்டார்


# எதிர்பாராத நெருக்கடிக்குள்

# ஜயசிக்குறுய் படைகள்

ஐந்துமாத வயதை ஜயசிக்குறுய் எட்டுகின்றது. தமிழீழ விடுதலைப்போராட்டம் சந்தித்த இராணுவ நடவடிக்கைகளில் மிகப்பெரியது என்ற பெயரையும் பெற்று - அது தொடர்கின்றது.

புளியங்குளச்சந்திப் பகுதியை கைப்பற்ற இயலாததால் 'படையினர்' ஜயசிக்குறுயின் வியூகத்தை மாற்றி - நடவடிக்கையைத் தொடர முயற்சிக்கின்றனர்.

புல்டோசர் கொண்டு தள்ளுவது போன்றதொரு நகர்வு வியூகத்தை வகுத்து, வவு-கிளிநொச்சி பாதை வழியே நகர முயன்றுள்ள படையினர், பின்னர், வியூகத்தை மாற்றியிருந்தனர். வளைவான கைப்பிடியைக்கொண்ட குடைத்தடி வியூக வடிவத்தை, படையினர் அமைத்திருந்தனர்.

புளியங்குளச் சந்தியைச் சுற்றி அரைவட்ட வடிவமாக, குடைக்கம்பின் வளைவான பகுதிபோல, தமது நிலைகளை அமைத்திருந்தனர். அத்துடன், இந்த வளைவின் தொடர்ச்சியாக இருக்கும் குடைத்தடிபோல புளியங்குளச் சந்தியில் இருந்து பிரதானபாதைக்கு கிழக்காக, காடுகளுக்கூடாக, கனகராயன்குளப் பகுதியை அண்டி நிலைகளை அமைத்திருந்தனர்.

இந்த குடைத்தடிவடிவ படை நிலைகளிலிருந்து கரிப்பட்ட முறிப்புவரை நகர்ந்து, அதை 'V' வடிவ வியூகமாக மாற்ற 5. 10. 97 அன்று படையினர் முயன்றனர். எனினும், 'V'யின் அடிப்பாகத்தில் அமைந்திருந்த படையினரின் வழங்கல் தளங்களை அழித்து - 'V' வடிவ வியூகத்தையும் தகர்த்து - கரிப்பட்ட முறிப்பு படையினரையும், புலி வீரர்கள், தனிமைப்படுத்தியுள்ளனர்.

30. 9. 97 அன்று கனகராயன்குளம் சந்தியை நோக்கி முன்னேறமுயன்ற சிங்களப் படையணி மீதான முறியடிப் புத்தாக்குதலின் விளைவுகளாலும் - கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் விநியோக முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டதன்விளைவுகளாலும் - மற்றும், வழங்கல் பாதைகள் இல்லாது கரிப்பட்ட முறிப்பு படையினர் தனிமைப்பட்டுக் கிடப்பதால் எழும் பிரச்சனைகள் காரணமாகவும். ஜயசிக்குறுய் படையினர் பாரிய நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர்.

5. 10. 97 அதிகாலை கரப்புக்குத்தி - விஞ்ஞானகுளம் முகாம்கள் மீதான பெருந்தாக்குதலுடன் தொடங்கிய ஜயசிக்குறுய் படையினருடனான சண்டை தொடர்ந்தும் நடந்தபடி உள்ளது.

இந்த தாக்குதல்களில் பெருந்தொகையான ஆயுதங்களையும் - பல இராணுவ உபகரணங்களையும் - கணிசமான வழங்கல் வாகனங்களையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

களங்கள் பலவற்றை ஒரே சமயத்தில் திறந்து - புலிகளை பரவலாக சண்டைக்கிழுத்து, புலிகளின் எதிர்ப்புவலுவைச் சிதறடிக்க சிங்களப் படைத்தலைமை விரும்புகின்றது. ஆனால், தான் வைத்த பொறிக்குள் தானே சிக்கி அல்லலுறுவதைப்போல, ஜயசிக்குறுய் படை நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. O




தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# சந்திரிகா அரசாங்கத்தின் அரசியல்நியூத்திரன் குண்டுகள்

புலிகளின் குரல்

தமிழரின் இனப்பிரச்சனையை 'நிரந்தரமாகத்தீர்க்க' இரண்டு பிரதான விடயங்கள் தடையாக இருக்கின்றன என சந்திரிகா அரசாங்கம் கருதுகின்றது.

ஒன்று, காலங்காலமாக சுடர்விட்டெரியும் தமிழர் தேசியம் என்ற அரசியல்நெருப்பு.

இரண்டு, இந்த உணர்வுத்தீயை கட்டிக்காத்து – வளர்க்க முற்படும் புலிகள் இயக்கம்.

இந்த இரண்டையும் இல்லாதுசெய்வதன் மூலமே இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்று அது நம்புகின்றது.

புலிகளை அழிக்க போரை ஒரு கருவியாக எடுத்துள்ளது. 'அமைதிக்கான போர்' என்று பெயர்சூட்டி அதை நாசூக்காகச் செய்ய அது முயற்சிக்கின்றது.

அதேநேரம், தீர்வுத்திட்டம் – அதிகாரப் பரவலாக்கல் என்ற மகுடங்களின் கீழ் தமிழர் தாயகத்தைக் கூறுபோட்டுச்சிதைத்து தமிழர் தேசியம் என்ற அரசியல்விருட்சத்தை அடியோடு சாய்க்க அது முயற்சிக்கின்றது.

புலிகளின் இராணுவ பலத்தில்தான் தமிழ் இனத்தின் அரசியல் தலைவிதி தங்கியிருக்கின்றது என்ற உண்மையை சந்திரிகா அரசாங்கம் சரியாகவே அடையாளங்கண்டுள்ளது. எனவேதான், புலிகளை நசுக்குதல் என்பதற்கு அரசு முன்னுரிமை கொடுத்து வருகின்றது. போரை விரிவுபடுத்தி – தீவிரமாக்கி, தமிழர் தாயகத்தின் கணிசமான நிலப்பகுதியை இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் கொண்டுவந்து புலிகளை விரியமிழக்கச் செய்விக்க அது முயற்சிக்கின்றது.

நில ஆக்கிரமிப்பில் ஒரு முன்னேற்றத்தைக் காட்டிவிட்டு தீர்வுப்பொதியின் சில விடயங்களை அது அவிழ்த்து விடுகின்றது. நில ஆக்கிரமிப்பு அதிகரிக்க – அதிகரிக்க தமிழர் தேசியத்திற்கு விரோதமான அரசியல் விடயங்கள், தீர்வுத்திட்டத்தின் அம்சங்களாக அறிவிக்கப்படுகின்றன.

அதிகாரப்பரவலாக்கலுக்கான நிர்வாக அலகுகள் என்ற போர்வையில் தீர்வுத்திட்டத்தில் தமிழர்தாயகம் கூறுபோடப்பட்டுள்ளது என்ற செய்தியை அமைச்சர் பீரிஸ் அவர்கள் 3.10.97 அன்று பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்டிருந்தார்.

வடக்கென்றும் கிழக்கென்றும் தமிழர் தாயகம் பிரிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியுடன் கிழக்குமாநிலம் பல துண்டுகளாக நறுக்கப்படவுள்ளது என்ற அறிவிப்பையும் – இதில் சில துண்டுகள் அருகிலுள்ள சிங்களமாவட்டங்களுடன் சங்கமமாகப்போகின்றது என்ற செய்தியையும் அவர் அறிவித்தார். தமிழர் தாயகத்தின் மையப்பகுதியான மணலாறு, அனுராதபுரமாவட்டத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது என்ற செய்தி இதற்கு முன்னரே வெளியிடப்பட்டுவிட்டது.

தமிழர்தாயகத்தையும் - தமிழர்தேசியத்தையும் குறிவைத்தபடி சந்திரிகாவின் தீர்வுப்பெட்டகம் உள்ளது என்ற உண்மை, இப்போது அம்பலமாகி விட்டது.

மீன்பிடிக்கக்காத்திருக்கும் கொக்கு முனிவர்வேடம் தரிப்பதுபோல, தமிழர்தேசியத்தை கருவறுக்க முயற்சிக்கும் சந்திரிகா அம்மையார் சர்வதேசியவாதிபோல நடிக்க முனைகின்றார்.

சிங்கள - பௌத்த உணர்வுச்சின்னமான அனுராதபுரத்து அரசமரத்திற்கு புலிகள் ஊறு விளைவித்தால் பதிலடியாக தமிழர்களைக் கொல்லும்படி உத்தரவிடத் தயங்கமாட்டேன் என்று–எதுவும் நடக்காத நிலையிலேயே-கோபத்துடன் இனவாதம்பேசிய அம்மையார், இது ஒரு நாடு நாங்கள் ஒரு மக்கள் என்று ஓநாய் வேதாந்தம் பேசி உலகை மயக்க முயல்கின்றார்.

இரண்டு அரசுகளின் படைகள்போல தமிழர் சேனையும் - சிங்களத்துப்படையும் மரபுப்போர் முறையில் சமர்புரிந்து இனமுரண்பாட்டின் அதி உச்சக்கட்டத்தை புலப்படுத்தியபடியிருக்கும் இன்றைய சூழலில் – தமிழர்தேசத்தை ஏற்றுக்கொண்டு – தமிழ்தேசியத்தை அங்கீகரித்து இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதற்குப் பதிலாக, ''ஒரு நாடு - ஒரு மக்கள்'' என்று அம்மையார் கூறவிரும்புவதற்கு ஒரு நாசகார உள்நோக்கமுண்டு.

போரின் விரிவாக்கத்தையும் - அதிகார அலகுகள் தொடர்பான தீர்வுத்திட்டத்தின் அம்சங்களையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால் அந்த நாசகார நோக்கம் புலப்படும். போர்மூலம் புலிகளை வென்று – அதன் மூலம் தமிழர் தேசியத்தைக் கொன்று, இலங்கைத்தீவை, சிங்கள பௌத்த நாடாகவும், அதன்மக்களை சிங்கள - பௌத்த மக்களாகவும் மாற்றுவதே அந்த நாசகாரநோக்கமாகும். தேசிய இன அந்தஸ்திலிருந்து தமிழர்களை, சமூகக்குழு என்ற தரத்திற்கு கீழிறக்கி, காலகதியில், சிங்கள இனத்துடன் சங்கமிக்கச் செய்துவிடுவதே அம்மையாரின் நீண்டகாலத்திட்டம்.

பொருளாதாரச் சுரண்டலுக்காக, பொருண்மிய வல்லரசுகளும் - பல் தேசிய நிறுவனங்களும் சர்வதேசியவாதம் பேசமுயல்வதுபோல, தமிழ் மக்களின் தேசிய இன அடையாளங்களை அழிப்பதற்காக, அம்மையார், சிறிலங்காத் தேசியவாதம் என்ற கற்பனையான அதேவேளை நாசகார நோக்கம் கொண்ட அரசியல் கோசங்களை எழுப்பத் தொடங்கியுள்ளார்.

பலஸ்தீன தேசியத்தை அங்கீகரித்து - 50 வருட யுத்தத்திற்கு முற்றுப்புள்ளிவைக்க - யூத தேசம் முயலும் இன்றைய சூழலில்; ஸ்கொட்லாந்து தேசத்தை அங்கீகரித்து தனது பரந்த மனப்பான்மையை ஆங்கில தேசம் வெளிப்படுத்தும் இன்றைய 21ஆம் நூற்றாண்டுச் சூழலில், சந்திரிகா அரசாங்கமானது மகாவம்சம் எழுதப்பட்ட 13ஆம் நூற்றாண்டுக்குச் செல்ல விரும்புகின்றது.

இந்தத்தீவு சிங்கள - பௌத்தர்களுக்குத்தான் சொந்தம் என்ற அந்தக்கால, வெளிப்படையான, பேரினவாத சித்தாந்தத்தை இந்தக்காலத்திற்கு ஏற்றவாறு, ஒரு நாடு - ஒரு மக்கள் - என்ற கோசம் மூலம் அம்மையார் வடிவமாற்றம் செய்துள்ளார்.

இந்தச் சாதுரியமான பேரினவாத நிலைப்பாட்டை, பழைய காலத்தைப் பிரதிபலிக்கும் அதிதீவிர பேரினவாதிகளால் புரிந்து கொள்ள முடியவில்லை, அல்லது, புரிந்தாலும், தமது பகிரங்க நிலைப்பாடே சரியானது என்று அடம்பிடிக்கின்றனர்.

கட்டடங்களை சொத்துக்களை அப்படியே இருக்கவிட்டு, உயிர்களை மட்டும் அழிக்கும் நியூத்திரன் குண்டைப்போல, ஆட்களைவிட்டுவிட்டு தமிழர் தேசியத்தை அழிக்க முயலும் சாதுரிய அரசியல் சூழ்ச்சிகளிலேயே அம்மையாரின் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. O

## நுணுக்குக்காட்டி

(புல்மோட்டையில்) புலிகள் தாக்கி எரிந்து கொண்டிருந்த கப்பலை திருமலை துறைமுகத்தை நோக்கி கரும்புலிகள் கொண்டுசெல்லலாம் என்றொரு பயம் இருந்தது. கப்பல் நகர்ந்தால் கப்பலைத் தாக்கும்படி கட்டளையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கட்டுரையாசிரியர் இக்பால்அத்தாஸ்
சண்டேரைம்ஸ்
செப் - 14, 1997

---

புலிகள் ஏவும் 81 மி. மீ. மோட்டர்களின் தொகையைப்பார்த்தால் அவை சிம்பாவேயிலிருந்து வந்த கப்பலில் இருந்த 32,400 மோட்டர் குண்டுகளின் ஒரு பகுதிபோலவே தென்படுகின்றன.

இராணுவ புலனாய்வுத் தகவல்கள்
சண்டேரைம்ஸ்
செப் - 21, 1997

---

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஆதரவுதேடி 'தவளம்' என்ற பெயரில் ஆடலும் – பாடலும் (கூத்து) நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டு, ஊர்ஊராக நடைபெற்றுவருகின்றன. அதேவேளை மறுபுறம் தனியார் பஸ்வண்டிகள் தொடக்கம் வானொலிகள் தொலைக்காட்சிகள் எல்லாமே போர்முரசு கொட்டுவதிலேயே ஈடுபடுகின்றன.

வீரகேசரி
செப் - 7, 1997

---

சிறீலங்கா ஒரு பௌத்தநாடு எனக் கூறும் அதேவாயால் இப்போது ஒரேநாடு – ஒரேமக்கள் என்று அறைகூவுவது எவ்வளவு தூரம் வரலாற்றுப் போலியாகத் தெரிகின்றது.

கட்டுரையாசிரியர் மாதொருபாகன்
தினக்குரல்
செப் - 9, 1997

---

பெற்றாரை பிரிந்த பிள்ளைகளும் பிள்ளைளைப் பிரிந்த பெற்றாரும் வவுனியா முகாம்களில் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். வயதுக் கட்டுப்பாட்டு விசாரணை, சி. ஐ டி. விசாரணை போன்ற பல விசாரணைகள் முடிந்தும், அனுமதிச்சீட்டு தயாராக இருந்த போதிலும் முகாம் பொறுப்பதிகாரியையும், இதற்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகரையும் திருப்தி செய்ய வழி தெரியாமல் மாதக்கணக்கில் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்.

கட்டுரையாசிரியர் கே. தர்மலிங்கம்
தினக்குரல்
செப் - 07, 1997

---

**கேள்வி:** இனப்பிரச்சனை தீர்வுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தவேளையில் அதற்கு சவாலாக சிங்கள ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகக் கருதப்படுகிறது. அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** சிங்கள ஆணைக்குழு அரசியலே நியாயமற்றது. கடந்த காலத்தின் ஒவ்வொரு அரசும் ( பண்டா – செல்வா ஒப்பந்தம் முதல் ) இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக ஏதாவது நடவடிக்கை எடுக்கும்போது இப்படியாக சில தீவிரபோக்குடையவர்கள் அதனை எதிர்க்கின்றனர்.

நீங்கள் நாட்டை பிரிக்க முயற்சிக்கிறீர்கள் என்பது போல் கூறி இவர்கள் தமிழர்களுக்கு நியாயமான உரிமை வழங்கப்படும் நடவடிக்கைகளை மறுக்கிறார்கள். இது ஒரு பழைய கதை. இவர்கள் தற்போது கூறும் விடயம் பிரமாதமானது. அதாவது தற்போது சிங்களவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றார்கள். நாடு சுதந்திரம் பெற்ற ஆரம்பத்தில் இதனைக் கூறியிருந்தால் அதுபற்றி சிந்தித்திருக்கலாம். ஆனால், தொடர்ச்சியாக 49 வருடகாலம் சிங்கள பெரும்பான்மை அரசுகளே இந்த நாட்டை ஆண்டு வந்து விட்ட இந்த நிலையில் இதனைக் கூறுவது விசித்திரமானது, வேடிக்கையானது. இத்தனைக்கும் மொழிக் கொள்கை மற்றும் கல்விக் கொள்கை என்பன அவர்களுக்கு சாதகமாக இருந்து வந்துள்ள போதிலும் அவர்கள் அப்படிச் சொல்வது மிகவும் வேடிக்கையானது... —

( இனத்துவ ஆய்வுகளுக்கான நிலையத்தின் பணிப்பாளரும் முன்னணி சிங்கள புத்திஜீவியுமான )

ரெஜி சிறிவர்த்தனா
தினக்குரல்
செப் - 28, 1997

# ஜயசிக்குறுய் சமரும் புளியங்குள சண்டைகளும்



**புலிகளின் சண்டைத்திறன்பற்றி எதிரிகூட்டு குறைத்து மதிப்பிட விரும்பமாட்டான். ஆனால், ஒரு மரபுவழிச் சமருக்கு அவசியமான பின்புலத் தேவைகளை, புலிகள், சமாளிக்கும் விதம் - ஒருமந்திரவித்தையைப் போல - அனைத்து இராணுவ விமர்சகர்களையும் ஆச்சரியப்படுத்தி வருகின்றது.**

**போராட்டத்தின் போக்குத் தொடர்பாக - அதற்கேற்படும் போராட்டத் தேவைகள் தொடர்பாக தலைவர் பிரபாகரன் வைத்திருக்கும் தூரப்பார்வையும், முன்னேற்பாடுகளும் தான் அந்த மந்திரவித்தையை நிகழ்த்துகின்றன.**

யாழ் - வவுனியா பிரதான சாலையில் ஒரு சாதாரணசந்தியாக இருந்துவந்த புளியங்குளம், இன்று, ஒரு போர்ப்பட்டணமாக உலகச் செய்தி நிறுவனங்களால் உருவகிக்கப்படுகின்றது.

புலிப்படையின் போர் ஆற்றலை மீண்டும் ஒருமுறை உலகத்திற்கு வெளிப்படுத்திக்காட்டும் பொருதுகளமாக புளியங்குளம் சண்டைகள் அமைந்துவிட்டன.

புளியங்குளம் சந்தியையும் அதன் சுற்றாடல்களையும் கைப்பற்றுவதற்காக சிங்களத்தின் பெரும்படை கடந்த நான்கு மாதகாலமாக பெரும்போரை நடாத்தி வருகின்றது. பகைவனின் ஒவ்வொரு நகர்வுமுயற்சியையும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் முறியடித்து- புளியங்குளம் சந்திப்பகுதியை - புலிவீரர்கள்– காத்து வருகின்றனர்.

புளியங்குளத்தைக் கைப்பற்ற பல்வேறு தாக்குதற் தந்திரோபாயங்களை பகைவன் செய்துபார்க்கிறான். சந்திப்பகுதியை சுற்றிவளைத்து - வட்டவடிவமாக அதை முற்றுகையிட்டு, பின்னர் கைப்பற்ற அவன் முயல்கின்றான். அதேவேளை, புளியங்குளச்சந்தியை மேவி, காடுகளுக்கூடாக கனகராயன் குளத்தை நோக்கி தனது படைகளை நகர்த்தி, அதைக்கைப்பற்றி, பிரதான பாதையில் இருந்து புளியங்குளத்தைத் துண்டாடி - தனிமைப்படுத்தவும் சிங்களப் படை ஆசைப்படுகின்றது. இவ்விதம் பல முயற்சிகளை அது எடுத்துவிட்டது. எனினும், உயிர் விலைகொடுத்து, பகைவனின் ஒவ்வொரு முயற்சியையும் புலிவீரர்கள் முறியடித்துவருகின்றனர். இதேபோன்று இன்னும்பல முயற்சிகளை, பல்வேறு முனைகளுக்கூடாக நடாத்த எதிரி முயற்சிக்கக்கூடும். இன்றைய நிலையில், ஜயசிக்குறுய் பூதத்தின் தொண்டைக்குள் சிக்கிய எலும்பாகவே புளியங்குளச் சண்டைகள் அதற்கு – அமைந்துள்ளன.

நான்குவகைப் பலத்தில் நம்பிக்கைவைத்து, பகைவன், ஜயசிக்குறுய் சமரைத் தொடங்கியிருந்தான். 1 அதனது ஆட்பலம் 2. அதன் ஆரில்லறி - மோட்டர்பலம் 3. ராங்க்குப் படையின் துணை 4. வான்படையின் ஆதரவு.

இந்த நால்வகைப் பலமும் பகைவன் எதிர்பார்த்ததுபோல அவனுக்கு உதவவில்லை. புலிவீரர்கள், அவற்றை சாதுரியமாக எதிர்கொண்டு-அவற்றின் வீரியத்தை பலவீனப்படுத்திவிட்டனர். ஜயசிக்குறுய் தற்போது சந்தித்துள்ள நெருக்கடிக்கும் இதுவே பிரதான காரணம்.

ஜயசிக்குறுயில் இதுவரை 15 ராங்க்குகள் அழிக்கப்பட்டுள்ளன. சில சேதமாக்கப்பட்டுள்ளன. 145 நாள் சண்டையில் மட்டும் 15 ராங்க்குகளை புலிகள் அழித்தது சாதாரண விடயமல்ல. அத்துடன் இவ்வளவு தொகை ராங்க்குகளை இழந்தும் பாதை முயற்சியின் அரைப் பங்கைக்கூட படையினரால் எட்டமுடியவில்லை. இந்தவகையில். புலிவீரர்களின் வீரமிகு செயற்பாடுகள் எதிரியினது ராங்க்குப் படையின் ஆவேசத்தை சிதைத்துவருகின்றன.

இதேபோல, எமது வீரர்கள் மேற்கொள்ளும் தற்காப்பு முன்னேற்பாடுகளாலும் – வித்தியாசமான சண்டைமுறைகளாலும், எதிரி ஏவும் ஆரில்லறி – மோட்டர் மழை, எதிர்பார்த்தது போல, பகைவனுக்கு பயனளிக்கவில்லை. சண்டை முனைகளுக்கு அப்பால் தாம் நினைத்தபடி குண்டுவீச விமானிகளுக்கு இலகுவாக இருக்கும் என்பது வேறு விடயம். ஆனால், சண்டைக்களத்தினுள் இலக்குவைத்துக் குண்டுவீச சிங்களவிமானிகள் மிகவும சிரமப்படுகின்றனர். எதிர்த்தாக்குதல்களால், சிலவேளைகளில், வானூர்திகள் சேதமாக்கப்படுகின்றன. அண்மையில், தாக்குதல் உலங்குவானூர்தி ஒன்று குண்டடிபட்டு, சேதமான நிலையில், அவசரம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புளியங்குளத்தை சுலபமாகக் கைப்பற்றி விடலாம் என்ற நம்பிக்கை பகைவனுக்கு முன்பிருந்தது. ஆனால், எதிர்த்தாக்குதலின் உக்கிரம் காரணமாக, இப்போது, பகைவன் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தபடியுள்ளான். 'தொடர்ந்தும் சண்டையிடமுடியாது' என்று இராணுவத்தின் களமுனைத்தளபதிகளும் சிப்பாய்களும் தத்தமது மேலதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யும் போக்கு அதிகரித்து வருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. சிங்களத்தின் பெரும்பாலான அரசியல் கட்சிகளும் – மற்றும் அரசியல் – இராணுவ அவதானிகளும் சமரின் பாதகவிளைவுகளுக்காக அரசை விமர்சிக்கின்றனர்.

**இன்றைய நிலையில், ஜயசிக்குறுய் பூதத்தின் தொண்டைக்குள் சிக்கிய எலும்பாகவே புளியங்குளச் சண்டைகள் அதற்கு - அமைந்துள்ளன.**

'தொடங்கிவிட்டோம்' என்ற காரணத்திற்காக பெரும்பொருட்செலவையும் - பாரிய உயிர் அழிவையும் ஏற்படுத்தும் முட்டாள்தனமான சண்டைகளில் அரசு ஈடுபடுவதாக. அவர்கள் கண்டன விமர்சனம் செய்கின்றனர், பெரும் இழப்புகளை விலையாகக்கொடுத்து பாதையை கைப்பற்றி வைத்திருந்தாலும் கூட, தூர இருந்தபடி, புலிகள், மேற்கொள்ளப் போகும் துல்லியமான எறிகணைத் தாக்குதல்களால் விநியோகமும் தடைப்படும் – உயிரிழப்புகளும் ஏற்படும் என்று அவர்கள் அரசை எச்சரிக்கை செய்துள்ளனர்.

ஆனால், சமரைத் தொடர்வதிலேயே சந்திரிகா – ரத்வத்த அரசு பிடிவாதமாக உள்ளது. தளபதிகளை மாற்றி மாற்றியும் - அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக அவர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்கியும், படைத்தளபதிகளை அரசு ஊக்குவிக்கின்றது. அதுபோல, சாதாரண படையினர்க்கும் பல்வேறு சலுகைகளை அறிவித்தும் - சண்டையைத் தொடரவே அரசாங்கம் விரும்புகின்றது. ஆனால், அரசின் ஊக்குவிப்பு முயற்சிகளுக்கு கள நிலைமைகள் ஒத்துழைக்க மறுக்கின்றன.

ஐந்தாவது மாத நிறைவுநாளை நோக்கி ஜயசிக்குறுய் நடை போடுகின்றது. மாரிமழை தொடங்கமுன்னர் ராங்க்குகளை உபயோகித்து ஒரு பெரிய வெற்றியைப்பெற அரசு துடிக்கின்றது. இதேவேளை, ஆயுதபலத்தால் மட்டும் ஜயசிக்குறுயின் இராணுவ இலட்சியத்தை அடைந்துவிடமுடியாது என்று படைத்தலைமை உணர்ந்து கொண்டுள்ளதுபோல் தோன்றுகின்றது. ''உக்கிரமான முறையில் மூர்க்கத்தனமாகப் போரிடவேண்டும்'' என்று களமுனைத் தளபதிகளுக்கு - ரத்வத்த–ஆலோசனை கூறியுள்ளதாக சண்டேரைம்ஸ் (செப், 21) செய்திவெளியிட்டுள்ளது. எனினும், ஆக்கிரமிப்புப் போர்ப் பண்பை அடிப்படையாகக் கொண்ட சிங்களப் படையிடம் அந்த 'உக்கிரமும் – மூர்க்கமும்' எதிர்பார்க்க முடியாத விடயங்களாகும் மாறாக, சண்டைகள் நீண்டு தொடரும்போது 'சோர்வும்–களைப்பும்' தான் சிங்களத்துப்படைகளின் மனதில் குடிகொள்ளும். அத்தகையதொரு போர் யுக்தியுடன்தான் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளும் வகுக்கப்படுகின்றன.

யாழ் மருத்துவமனை - கிளிநொச்சி மருத்துவமனை போன்ற சத்திரசிகிச்சை வசதிகளையுடைய சிகிச்சை நிலையங்களை படையினர் கைப்பற்றியதால் புலிகளின் மரபுப்போர் வலு சிதைந்துவிட்டது என்றே பகைவன் எண்ணினான். தேவையான அளவு மருந்துகளுடன் கூடிய மருத்துவமனைவசதிகள் இல்லாதுவிடின் எந்த ஒரு படையாலும் மரபுப்போரை நடாத்த முடியாது என்ற சாதாரண இராணுவ பாடத்தை அடிப்படையாகக் கொண்டே மேற்குறித்த முடிவுக்கு படைத்தளபதிகள் வந்தனர்.

ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களில் முடிவு பெறும் ஒரு பெருந்தாக்குதலில் காயமடையும் தனது வீரர்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவ வசதிகளை புலிகள் கொண்டிருக்கின்றனர் என்று அரசு நம்பினாலும், நீண்டு இழுபடும் ஒரு பாரிய மரபுச்சமரின் மருத்துவதேவையை ஈடுசெய்யும் வசதி புலிகளிடம் நிச்சயம் இல்லை என்றே அது நம்பியது.

ஜயசிக்குறுய் நடவடிக்கைக்கான திட்டத்தை வரைந்த போதும், அதற்கு 'வெற்றி உறுதி' என்று நம்பிக்கையுடன் பெயர் சூட்டியபோதும் இந்த மருத்துவ அம்சத்தை அடிப்படையாக வைத்தே படைத்தலைமை சிந்தித்தது ஆனால், ஐந்து மாதங்களைக் கடந்தும் புலிகள், மரபுப் போரை உறுதியுடன் – திறமையாக நடாத்துகின்றனர். அதுமட்டுமல்ல, படையினர், புதிது புதிதாக களங்களைத்திறக்கும் போதெல்லாம்' புலிகளும் அதை எதிர்கொண்டு களங்களை விரிவுபடுத்தி - அனைத்து முனைகளிலும் உக்கிரச் சண்டைகளை நிகழ்த்துகின்றனர்.

புலிகளின் சண்டைத்திறன்பற்றி எதிரிகூட குறைத்து மதிப்பிட விரும்பமாட்டான். ஆனால், ஒரு மரபுவழிச் சமருக்கு அவசியமான பின்புலத் தேவைகளை, புலிகள், சமாளிக்கும் விதம் ஒரு மந்திரவித்தையைப் போல – அனைத்து இராணுவ விமர்சகர்களையும் ஆச்சரியப்படுத்திவருகின்றது.

போராட்டத்தின் போக்குத் தொடர்பாக - அதற்கேற்படும் போராட்டத் தேவைகள்தொடர்பாக தலைவர் பிரபாகரன் வைத்திருக்கும் தூரப்பார்வையும், முன்னேற்பாடுகளும் தான் அந்த மந்திரவித்தையை நிகழ்த்துகின்றன. ○

# இருட்டை வரைபவர்கள்

**செ**ன்ற 17 ஆம் திகதி புதன்கிழமை-கொழும்புவாழ் நவ நாகரிக மக்களுக்கு அதிசயமான காட்சியொன்று காணக்கிடைத்தது. பழைய சிங்கள மன்னர் காலத்து பாரம்பரியங்கள் கொழும்பு மாநகர வீதிகளிலே மீண்டும் தோற்றம் பெற்றன. மூவாயிரத்திற்கு மேற்பட்ட பிக்குகளும், ஆதேயளவான மக்களும், பழைய கண்டி பிரதானிகள் போல ஆடை அணிகலன் பூண்டோரும், ஏதோ மிகப் புனிதமான பொருளொன்றை காவிச் செல்வது போல சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையை காவிச் சென்றனர். பொரல்லையிலிருந்து புறப்பட்ட இவ் ஊர்வலம் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மையமாக விளங்கும் அகில இலங்கை பௌத்தகாங்கிரசின் (ACBC) தலைமை அலுவலகத்தில் முடிந்தது. தலைமை அலுவலகத்திலே மல்வத்தை அஸ்கிரிய மகாநாயக்கர் உட்பட ஏனைய மகாநாயக்கர்களும் பௌத்த அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கூடியிருந்தனர். பல்வேறு பௌத்த அமைப்புக்களும் இடம் பெறும் தேசிய கூட்டமைப்பின் தலைவரான முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் ராஜா வண சுந்தர இவ் இடைக்கால அறிக்கையை மல்வத்தை மகாநாயக்கரான தம்புக்வெல விபவி மகா தேரரிடம் கையளித்தார். சந்திரிகாவின் அரசியல் பொதி நாடக அரங்கேற்றத்திற்கு போட்டியாக, சென்ற வருடம் டிசம்பரில், சிங்கள ஆணைக்குழு நாடகம் பௌத்தத்தின் காவலர்களால் அரங்கேற்றப்பட்டது. இதுவரை சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட (?) அநீதிகளை கண்டறிந்து தீர்வுக்கான பரிந்துரைகளை செய்வது, இன்னொரு உயர்நீதிமன்ற நீதியரசரான S. W. வல்பித்த தலைமையிலான இவ்வாணைக்குழுவின் கடமை. இப்போது சந்திரிகா அம்மையாரின் அரசியல் நாடகம் சூடு பிடிக்கவே அதற்கேற்ப அவசரம் அவசரமாக இடைக்கால அறிக்கையும் சூட்டோடு சூடாக சிங்கள அரசியல் களத்தில் வந்திறங்கி விட்டது.



இச்சம்பவத்தின் பொருள் என்ன? சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனைக்கு மூல காரணமான அனகாரிக தர்மபாலாவின் 133வது பிறந்த நாள் நினைவு கூரல் அன்று இப்பொதி கையளிக்கப்பட்டது ஏன்? ஏனைய சகல சிங்கள அரசியல் கட்சிகளும் பங்கு பற்றி அறிக்கையை பெற்ற இப்பேரினவாத நிகழ்வில், அமைச்சர் D. M. ஜெயரட்னாவும் பங்கு பற்றி தானும் அறிக்கையை பெற்றதேன்? சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான இவர், பொதுசன முன்னணியின் பொதுச் செயலாளரும் ஆவார். இன்று சிங்கள அரசியல் உலகிலே பெரும் பரபரப்பை கிளப்பிவிட்ட இக்கையேற்போடுதான் எமது கதையும் ஆரம்பமாகின்றது. ஆணைக்குழு அறிக்கையை அம்மையார் கண்ணெடுத்தும் பாரார் என, தாம் சொல்வதில் தமக்கே நம்பிக்கையில்லாமல், நாவில் எச்சில் நீர் வடிய கையறு நிலையிலேயே தங்கு மடம் கட்டிவிட்ட எம்மவர் சிலர் அவசரமாக அறிக்கை விட்டும் என்ன பயன்? உண்மை நிலை எவ்வாறுள்ளது? சிங்களத்தின் கருத்துருவாக்கத்திலே பெரும் பங்கு வகிக்கும் ஆங்கில, சிங்கள ஏடுகள் என்ன கூறி நிற்கின்றன? " ஆணைக்குழுவின் அறிக்கையை தமிழ்க்குழுக்கள், கட்சிகள் நிராகரிக்கலாம்; ஆனால் அதனை அரசாங்கம் முற்றாக நிராகரிப்பது அதற்கு அரசியல் தற்கொலையாகிவிடும் " என்று கடுமையாக எச்சரிக்கின்றது 20/9 ஐலண்ட் ஏட்டின் தலையங்கம். ஓரளவிற்கு சிங்கள யதார்த்தத்தை பிரதிபலிக்கும் சண்டே ரைம்ஸ் என்ன எழுதுகின்றது? 21/9 சண்டே ரைம்சின் முதன்மை அரசியல் ஆய்வாளர் கூறுகிறார் " இப்போது எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக்கட்சிக்கு வேலை இலகுவாகிவிட்டது. அதனுடைய வேலையை சிங்கள ஆணைக்குழுவே மேற்கொள்ளப் போகின்றது. இவ்வாணைக்குழு அறிக்கை சிங்கள தேசிய வாதிகளின் நாடி நரம்புகளை தூண்டி நாடெங்கும் அரசியல் நெருக்கடி நிலையை உருவாக்கப் போகின்றது. தெற்குச் சிங்களப் பொதுமக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் இவ்வறிக்கையை இலகுவில் தட்டிக்கழிக்க முடியாது. அரசியல் பொதிக்கூடாக அமைதி என்கிற அரசின் இலக்கு, இனி அடையப்படுவது மேலும் சிக்கலாக்கப்பட்டு விட்டது'' இவ்வாறாக பல அவநம்பிக்கை விதைகளை விதைக்கின்றார் அவர்.

அப்படி என்னதான் கூறுகின்றது இந்த இடைக்கால அறிக்கை? பல பக்கங்கள் நீளும் இவ்வறிக்கையின் மையக்கருத்து இங்கே சுருக்கித் தரப்படுகின்றது. '' தற்போதைய வடிவில் அரசியல்பொதி நடைமுறையிலிடப்பட்டால் அது 2500வருடங்களுக்கு மேலாக கட்டிக்காக்கப்பட்ட இந்நாட்டின் ஒருமைப்பாட்டை சிதைப்பதோடு மட்டுமன்றி மேலும் இந்நாட்டிற்கு பேரழிவை ஏற்படுத்திவிடும். நாட்டின் நான்கில் மூன்று பங்கினராக சிங்கள மக்கள் இருந்த போதும், ஏற்கெனவே ஒதுக்கப்பட்டு வாழும் நிலையிலுள்ள இம் மக்களை வறுமையிலிட்டு வாட்டியும் விடும்'' என அச்சுறுத்தும் இவ்வாணைக்குழுவின் முக்கிய அம்சங்களை சுருக்கிப் பார்த்தால்-

**வே. பாலகுமாரன்**

★ இந்தப் பொதி மூலம் அமைதி வரா்து. புலிகள் ஏற்கெனவே இப் பொதியை நிராகரித்து விட்டனர். எனவே, புலிகளை தோற்கடிப்பதன் மூலமே நாட்டில் அமைதி வரும். இந்தப் பொதி மூலமாகவல்ல - எனவே எதற்கு இந்தப்பொதி?

★ இந்தப்பொதி நிறைவேற்றப்பட்டால் இந்த உலகிலே எங்கும் காணமுடியாத ஒரு விசேட இணைப்பாட்சி ( சமஷ்டி ) அமைப்பை கொண்ட நாடாக சிறிலங்கா மாறிவிடும். எனவே இதனை ஏற்க முடியாது.

★ அரசுக்கு நாட்டின் எட்டு அல்லது ஒன்பது பகுதிகளை கட்டுப்படுத்த முடியாது போய் விடும்.

★ வடகிழக்கு சபை தன்னிச்சையாக தனி நாட்டை பிரகடனப்படுத்துவதையோ தனிப் பாதுகாப்புப்படை கட்டியெழுப்புவதையோ தடுக்கமுடியா்து.

★ இவ்வளவு காலமும் பாதுகாப்புப் படைகள் செய்த தியாகம் வீண்போவதா? நல்லவேளையாக மக்கள் விருப்பின்றி இப் பொதியை நடைமுறைக்கு கொண்டு வரமுடியாது. எனவே மக்களிடம் பொதிக்கு எதிராக கருத்துக்கள் முன் வைக்கப்படும்.

இவ்வாறு, சிங்கள ஆணைக்குழுவின் கற்பனைக்கு எல்லை கிடையாது நீளும் ஒவ்வொரு வரியும், இனவாத வெடிமருந்துப் பொதியாகின்றது. உண்மையிலே உள்ளடக்கம் எதுவுமேயில்லாத, நிறைவேற்றப்படவே வழியில்லாத ஒரு அரசியல் ஏமாற்று வித்தைக்கு மாற்றாக இன்னொரு ஏமாற்று வித்தையே இவ்வாணைக்குழுவின் அறிக்கை. இவை சிங்கள பௌத்த பேரினவாதமென்னும் நாணயத்தின் இருபக்கங்களே. நிறைவேற்றவே வழியில்லாத, அதற்கு 'மனமுமில்லாத சந்திரிகாவுக்கு, பொதியை கைவிடத் தக்க காரணம் கிடைத்து விட்டது.

புளியங்குளத்தோடு சிங்களத்தின் இராணுவத் தீர்வின் சாயம் வெளிப்பட்டுவிட்டது. போருக்கு பூசப்பட்ட அரசியல் சாயமும் ஆணைக்குழு அறிக்கையோடு அம்பலமாகிவிட்டது. ஏற்கெனவே கொழும்பு வாழ் தமிழர்களின் செயலணிக்குழு கூறிவிட்டது. '' காலக்கெடு விதித்து. புலிகள், 1995 ஏப்ரல் 19 இல் மீண்டும் தமது போராட்டத்தை தொடங்கியது எவ்வளவு அரசியல் விவேகமான செயல்.'' இப்போது எல்லோருக்கும் ஞானம் உதிக்கும் நேரம். அமைச்சர் அஷ்ரப்புக்கு அண்மையில் உதித்த ஞானமிது – " எமக்கும் புலிகளுக்குமிடையில் எந்தப் பிரச்சனையுமில்லை. அவர்கள் போராட்டத்தை மதிக்கின்றோம், வீரத்தை மெச்சுகின்றோம், அவர்கள் போராட்டத்திற்கு நாம் என்றும் தடையாக இருந்ததில்லை.'' எப்படிப்பட்ட ஞானமிது?

புலிவீரன் புளியங்குளத்திலே பாய்ச்சிய குருதி தோற்றுவிக்கும் விடுதலைப் பேரொளியின் முன்னே அரசியல் பொய்மைகள், ஏமாற்று வித்தைகள் எல்லாமே அகன்று உதிக்கும் ஞானமிது. ○



## அழியும் சாகஸங்களும் வனதேவதையின் சிரிப்பும்

திறக்காத பூதமாய் உள்ளிருந்து
சாகஸம் புரியும் 'பீரிஸின் தீர்வுப்பொதி'
உலக மனதைத் தன்வசமிழுக்கும்
மந்திரக் கோலுடன் பீரிஸ்!
கதிர்காமர் பூச்செண்டுடன் உலாவருகிறார்;
சமாதானச் சொற்களைக் கொடுத்து
கடன் கேட்டுக் கடன் கேட்டு
போருண்டியல் நிரப்புகிறார், வாழ்க!
சாகஸக்காரனாகவும் புகழேறியாகவும்
'கெமுனு' புத்திரன் ரத்வத்த
யுத்தக் கனவில் வெற்றிப்பதக்கங்கள் சூடி
கண்ணாடியில் பார்த்துச் சிரிக்கிறார்,
கண்ணாடியும் சிரிக்கிறது;
பாவம் பேதையென்றோ பாவி
முட்டாளென்றோ..!

பகலெல்லாம் சமாதானம் புலம்பி
இரவுகளில் தூக்கமின்றி
போரின் ஞாபகங்களில் உழல்கிறாள்
பெண்ணரசி.
மந்திராலோசனைக் கூடத்தில்
படைத்துறை ஆட்களும் சேனாதிபதிகளும்
விழிகள் மலங்க சுவர்களை வெறித்த
காட்சி இன்னும்
அரசியை அச்சமூட்டுகிறது.
சோர்வான குரலில் அவர்கள்
எதையோ சொல்லத் தடுமாறினர்.
'என்னவாயிருக்கும் அது?' என்றறியாது
இருளில் தேடுகிறாள் அவள்.
அவளுடைய விழித்த விழிகளுக்கு நேரே
இரத்தத்தில் மிதந்து வருகின்றன
அவள், படைத்தலைகள்.
அச்சம் புரக்கேறித் திணறுகிறாள் பெண்ணரசி.

சேனைகள் தப்பியோடி மறுகும் சேதி
அரண்மனைச் சுவர்களில் மோதி அதிர்கிறது.
தெருத்தெருவாக சனங்கள் முகம்
கோணிப்போகிறார்கள்.

உலகெலாம் முளைத்த பொய்களோடு வாழும்
சரத்முனசிங்க
எந்தப் பொய்யை எப்போ
தேர்வதென்றறியாது திகைக்கிறார்.
அவரைத் திட்டித் தீர்க்கிறாள்
அவர் மனைவிகூட.
'இந்தப் பயலை ஈன்றேனே நானெ'ன்று
அழுதுபுலம்புகிறாள் முனசிங்கவின் அம்மா.

ஒன்றும் புரியாத உள்வீட்டுப் பிள்ளைகள்
தம்பாட்டில் இருக்கின்றனவோ; இல்லை
தலையாட்டித் தலையாட்டி
பொய்க்காலத்துக்கும் போர்ப்பர்வத்துக்கும்
சம்மதம் சொல்கிறார்கள் சமபந்திகளாக......

நீள நெடுமரங்களிடையே
பகல்களுமில்லை இரவுகளுமில்லையென்று
படை வியூகத்தில் நாங்கள்.
குதிரைகள் பாயத் தாவுகின்றன.
வாளேந்திய வீரர்கள்
மின்னும் வாள்களைச் சுழற்றித்
துடிக்கிறார்கள்.
சமாதானத் திரையுள்ளொளிந்திருக்கும்
போர்முகத்தின்
தலையைச் சீவிடத் துடிக்கிறோம்.
சிங்கமுகச் சேனைகள் வன்னிக்கு வந்ததேன்?
வன்னிக்கு வந்ததேன்?
மெல்ல ஊறிவரும் வன்னிச் சிற்றாறுகளில்
நீரருந்தி
மின்னும் வாள்களைச் சுழற்றிச் சுழற்றி
நாங்களுள்ளோம்.
எங்கள் வனதேவதை மகிழ்கிறாள்.

பீரிஸின் பூதத்தை பீரிஸின் பரிவாரங்களே
தின்கின்றன.
'கெமுனு' புத்திரனின்
போரின்முகமோ கறுத்துப் போகிறது,
அரசியின் சபத வார்த்தைகளோ
நிறமிழந்தழிகின்றன.
சாபம்பெற்ற பௌர்ணமியைப் பாம்பு
விழுங்கித்தொலைகிறது.

அரசமிலைகள் உதிர்ந்து
தெற்கே அழகிய முற்றங்களையெல்லாம்
மூடுகின்றன; அங்கே
யாரோ ஒரு முதியபெண் விசும்புகிறாள். ○

**- கருணாகரன் -**

# இராணுவ நடவடிக்கைகளும் அவற்றின் விளைவுகளும்

தமிழரின் இனப்பிரச்சனையை அரசியல் வழிமுறைகள்மூலம் தீர்க்க என்று கூறிக்கொண்டு, சிறிலங்கா அரசு, எத்தனை பேச்சுவார்த்தைகளை நடாத்தி முடிவில்லாமல் முடித்தது என்ற விபரம் தமிழ் மக்கள் அறிந்ததே.

அதுபோல, தமிழரின் இனப்பிரச்சனையை இராணுவ வழியில் தீர்க்கவிரும்பி எத்தனையோ இராணுவ நடவடிக்கைகளை, ஒன்றின்பின் ஒன்றாக, சிறிலங்கா அரசு செய்துவருகின்றது.

ஒவ்வொரு பேச்சுவார்த்தையையும் சிங்கள அரசாங்கங்கள் முறிக்கும்போது அல்லது முறிக்கும் சூழலை ஏற்படுத்தி முறிப்பிக்கும்போது, தமிழரின் விடுதலைப்போராட்டம் ஒருபடி வளர்ச்சி நிலையை அடைவதுபோல, ஒவ்வொரு இராணுவநடவடிக்கையையும் சிங்களப்படைகள் நடாத்திமுடித்த பின்பும், தமிழரின் விடுதலைப் போராட்டம் தீவிரநிலையை அடைவது இலங்கையின் அரசியல் வரலாறாகும்.

சில இராணுவ நடவடிக்கைகள் மூலம், சிங்களப்படைகள், எமது பட்டணங்களை – ஊர்களை ஆக்கிரமித்துள்ளன. ஆயினும் அரசியல் ரீதியிலும் - இராணுவ ரீதியிலும், தமிழரின் விடுதலைப் போராட்டம் வீரியம் பெற்றபடி முன்னேறிச்செல்கின்றது என்ற உண்மையை சிங்கள அரசாங்கங்கள் காணத்தவறுகின்றன.

தமிழீழத்தின் வடபோரரங்கிலும் – தென் போரரங்கிலும், இதுவரை, சிறிதும் – பெரிதுமாக 40ற்கும் மேற்பட்ட இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்கா அரசு நடாத்தி முடித்துள்ளது. தான் நடாத்தும் இராணுவ நடவடிக்கைகளுக்கு, பெரும்பாலும், பெயர் சூட்டி அடையாளப்படுத்துவது சிறிலங்கா அரசின் ஒரு வழமை. இதில், சில இராணுவ நடவடிக்கைகள் சமர் என்ற வகைக்குள் அடக்கக்கூடிய அளவுக்கு அவற்றின் இராணுவ பரிமாணங்கள் அமைந்துள்ளன. (இந்திய – புலிகள் போர் இடம் பெறவில்லை) அத்தகைய முக்கிய சமர்களை நாங்கள் இங்கே பட்டியலிட்டுள்ளோம்.

ஒவ்வொரு சமரும் எத்தனை நாட்கள் நடந்தன?

இராணுவதரப்பு உயிரிழப்பு என்ன?

புலிகள் தரப்பு உயிரிழப்பு என்ன? என்ற விபரங்களை இங்கே தொகுத்துள்ளோம். (அட்டவணை I) குறிப்பிட்ட இந்த இராணுவ நடவடிக்கைகள் எப்போது தொடங்கின? எப்போது முடிவுக்குவந்தன? என்ற தகவல்களையும் இங்கே தொகுத்துள்ளோம். (அட்டவணை II)

இராணுவநடவடிக்கைகளில் இருதரப்பிலும் ஏற்படும் ஆள் இழப்பு வேறுபாடுகளைப் பொறுத்த வகையில் புலிகளைவிட படையினரின் உயிரிழப்பே அதிகமாக இருப்பதைக் காணலாம். சில சமர்களில் இந்த வேறுபாடு இரண்டுக்கு ஒன்று, அல்லது, மூன்றுக்கு ஒன்று என்ற வீதத்தில் – முறையே படையினரதும்; புலிகளினதும் – இறப்புவீதம் இருப்பதைக் காணலாம்.

படையினரைவிட புலிகளுக்கு அதிகளவு உயிரிழப்பு ஏற்பட்ட சமராக, ஒரே ஒரு சமரைமட்டுமே குறிப்பிடலாம். 'பலவேகய' என்று எதிரி பெயர் சூட்டிய ஆ. க. வெ. சமரே அதுவாகும். இந்தச் சமரில் 602 போராளிகள் வீரச்சாவடைந்தனர். படையினரில் 400 பேரே கொல்லப்பட்டிருந்தனர். புலிகள் சந்தித்த முதலாவது மரபுவழிச்சமர் என்ற முக்கிய காரணத்துடன் – வெட்டவெளியில் கவசங்கள் அற்று நடந்த ஒரு சமர் என்பதாலும் புலிகள் அதிக இழப்பைச் சந்திக்கவேண்டி வந்துவிட்டது.

இது ஒருபுறமிருக்க குறைந்த நாளில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய சமராக யாழ்தேவி அமைந்துள்ளது. 7 நாட்கள் மட்டுமே நடந்த இந்தச் சமரில், இருதரப்பிலும், ஏறக்குறைய 250 பேர்வரை பலியாகியிருந்தனர். அதாவது நாளொன்றுக்கு இருதரப்பையும் சேர்த்து - 34 பேர் களப்பலியாகிய சமராக அது இருந்தது. இது பலவேகய வீதாசாரத்தைவிட (32 பேர்) அதிகமானது.

இதேவேளை, அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள அனைத்துச் சமர்களிலும் 'மின்னல்' நடவடிக்கை வித்தியாசமான பரிமாணத்தைக் கொண்டமைந்துள்ளது. இது ஒரு முற்றுமுழுதான காட்டுச்சமர். அத்துடன், ஆ. க. வெ. சமர்முடிந்து இருபது நாளில் இது தொடங்கப்பட்டிருந்தது. அந்த நெருக்கடியான சூழலில் – வளப்பற்றாக்குறைகளுடன் அந்தச் சமரை எதிர்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் புலிகளுக்கு இருந்தது. எனினும், திறமையாகப் போர்புரிந்து. உள்நுழைந்த படையினரை, மணலாற்றுக்காட்டிற்குள் இருந்து. புலிகள் வெளியேற்றி இருந்தனர்.

இதுவரை காலமும் நடந்த சமர்களுக்குள் ஜயசிக்குறுய் ஒரு விசேட கவனத்தைப்பெறுகின்றது: இது ஒரு பாரிய சமர். சமர் நடைபெறுகின்ற நாட்கணக்கிலும் – உயிரிழப்புகள், ஆயுத இழப்புகள் மற்றும் ஆயுத – படைக்கல பயன்பாடுகளிலும் ஜயசிக்குறுய் ஒரு உயர்ந்த இராணுவ பரிமாணத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. புலிகளின் சரமாரியான எறிகணைவீச்சுக்கள் இந்தச் சமரின் குறிப்பிடக்கூடிய ஒரு இராணுவ அம்சம். ஒரு மரபுப்படையைப்போல, புலிகள் எறிகணை வீச்சை நடாத்துகின்றனர் என்று படைத்தளபதிகள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர். அதுவும் துல்லியமான இலக்குவைப்பு என்று புகழாரமும் சூட்டுகின்றனர். மற்றைய எந்த ஒரு சமரையும் விட காயமடையும் இராணுவத்தின் எண்ணிக்கை, ஜயசிக்குறுயில், பல மடங்காக உள்ளது. புலிகளின் துல்லியமான- பெருந்தொகையிலான எறிகணை வீச்சே அதற்குப் பிரதான காரணம். ஐந்துமாதப் பூர்த்தியை எட்ட இருக்கும் ஜயசிக்குறுய் மேலும் பல மாதங்கள் தொடரக்கூடிய ஏதுநிலைகள் தென்படுகின்றன.

'புலிகளை அழிக்க' அல்லது போராட்டத்தை நசுக்க என்று எத்தனையோ இராணுவ நடவடிக்கைகளை, ஏதேதோ பெயரில், சிங்களப்படை நடாத்திவருகின்றது. சில பெயர் சூட்டல்கள் வீறாப்புத்தனம் கொண்டவை. சிலவற்றில் வெற்றிமுழக்கம் தொனிக்கின்றது. ஆயினும், ஒரு இராணுவ நடவடிக்கை முடிய, பின்னர், வேறு ஒரு இராணுவ நடவடிக்கையைத் தொடங்கவேண்டிய நிலையிலேயே களநிலைமை உள்ளது.

இராணுவ நடவடிக்கைகள்மூலம் தமிழரின் விடுதலைப்போராட்டத்தை அழிக்கமுடியாது. மாறாக, ஆயுதப்போராட்டம் வீரியம் பெற்று வளர்ந்துசெல்ல அவை உரமாகின்றன. இந்த உண்மையை சிங்கள அரசாங்கங்கள் என்று உணர்ந்துகொள்ளுமோ தெரியாது!

**ஒவ்வொரு பேச்சுவார்த்தையையும் சிங்கள அரசாங்கங்கள் முறிக்குமபோது அல்லது முறிக்கும்சூழலை ஏற்படுத்தி முறிப்பிக்கும் போது, தமிழரின் விடுதலைப்போராட்டம் ஒருபடி வளர்ச்சி நிலையை அடைவது போல, ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையையும் சிங்களப்படைகள் நடாத்திமுடித்த பின்பும், தமிழரின் விடுதலைப்போராட்டம் தீவிரநிலையை அடைவது இலங்கையின் அரசியல் வரலாறாகும்.**


| இராணுவ நடவடிக்கையின் பெயர் | நடைபெற்ற நாட்கள் | படையினரின் உயிரிழப்பு | புலிகளின் வீரச்சாவு | (இருதரப்பு) நாள் ஒன்றுக்கு சாவுவீதம் |
|---|---|---|---|---|
| 1. ஆ.க.வெ/பலவேகய | 31 | 400 | 602 | 32 |
| 2. மின்னல் | 29 | 300 | 233 | 18 |
| 3. யாழ்தேவி | 07 | 150 | 88 | 34 |
| 4. சூரியக்கதிர் | 49 | 750 | 438 | 24 |
| 5. சத்ஜய | 70 | 700 | 254 | 13 |
| 6. ஜயசிக்குறுய் | 145+ | 1400+ | 662+ | 15 |

அட்டவணை I

| இராணுவ நடவடிக்கையின் பெயர் | ஆரம்ப நாள் | முடிவு நாள் |
|---|---|---|
| 1, பலவேகய/ஆ. க. வெ. | 10. 07. 1991 | 09. 08. 1991 |
| 2. மின்னல் | 29. 08. 1991 | 26. 09. 1991 |
| 3, யாழ்தேவி | 28. 09 1993 | 04. 10. 1993 |
| 4. சூரியக்கதிர் | 17. 10. 1995 | 05. 12. 1995 |
| 5, சத்ஜய | 26. 07. 1996 | 03. 10. 1996 |
| 6. ஜயசிக்குறுய் | 13. 05. 1997 | தொடர்கின்றது |

அட்டவணை II

# ஜயசிக்குறுய் நடவடிக்கையை புலிகள் எவ்விதம் எதிர்கொள்கின்றனர்




கடந்த நான்கரை மாதகாலமாக வன்னியில் ஒரு மரபுவழிச்சமர் உக்கிரமானமுறையில் நடைபெறுகின்றது. புளியங்குளம் சந்தியை அண்டிய பகுதியிலிருந்து நெடுங்கேணிவரையான சுமார் 30 கி. மீ. நீளமான பகுதியில் சண்டைகள் நடைபெறுகின்றன. இந்த நீண்ட முனையைக் கொண்ட சமர்க்களத்தில் ஏறக்குறைய முப்பதாயிரம் படையினர் சண்டைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிங்களத்தின் ராங்க்குப்படை மற்றும் ஆட்டிலறி – மோட்டர் படையின் தொண்ணூறு வீதமான பலம் இந்தச் சமரில் பயன்படுத்தப்படுகின்றது. வான்படையும் அவ்வாறே செயறபடுகின்றது. அதேசமயம் ஆள் தொகையைச் சமாளிப்பதற்காக, சிறீலங்காவின் கடற்படையினரும் காவல்துறையினரும் சமர்முனைப்பணிகளுக்கென அனுப்பப்பட்டுள்ளனர். சிறீலங்கா அரசைப் பொறுத்தவகையில் தனது படைவளத்தின் பெரும்பகுதியை ஒருங்குதிரட்டி ஜயசிக்குறுய் சமரில் பயன்படுத்திவருகின்றது.



தாண்டிக்குளத்தில் இருந்தும், கென் – டொலர் பண்ணைப் பகுதிகளில் இருந்தும் நகரத் தொடங்கிய இந்தப் பெரும் படை புளியங்குளப் பகுதியில் கடுமையான எதிர்ப்பைச் சந்தித்து, கடந்த நான்கு மாதகாலமாக, அங்கேயே முடங்கிப்போயுள்ளது.

புல்டோசர் கொண்டு மண்ணைத் தள்ளுவதுபோல வவுனியா – கிளிநொச்சிப் பாதைவழியே புலிகளின் எதிர்ப்பைத் தள்ளிக்கொண்டு செல்லவிரும்பிய சிங்களப்படைக்கு அந்த நகர்வு வியூகம் முடியாததாகிவிட்டது. இப்போது, வேறு ஒரு வியூகத்தை அது அமைத்துள்ளது.

தற்போதைய நிலையில் வளைவான கைப்பிடியைக்கொண்ட ஒரு குடைத்தடி போல, ஜயசிக்குறுய் படையின் சண்டை அணிகள் வியூகமிட்டுள்ளன. புளியங்குளத்தைச் சுற்றி அரைவட்டவடிவமாக, குடைக்கம்பின் வளைவு போல, தமது நிலைகளை அமைத்துள்ளனர். அந்த வளைவின் தொடர்ச்சியாக இருக்கும் குடைத்தடிபோல புளியங்குளத்திலிருந்து, பிரதான பாதைக்கு கிழக்காக, காடுகளுக்கூடாக கனகராயன்குளப் பகுதியை அண்டி நிலைகளை அமைத்துள்ளனர். இந்தக் குடைத்தடி வியூகப் படையணிகளுக்கு ஓமந்தையூடாகவும் – நெடுங்கேணியூடாகவுஞ் விநியோகம் நடைபெறுகின்றது. விநியோகப் பாதைகளும் படையினர் வசமே உள்ளன.

தரையைக் களமாகக் கொண்டு நடைபெறும் மரபுவழிச்சமரில் ராங்க்குகளும், ஆட்டிலறி-மோட்டர்களும், வான்கலங்களும் மிக முக்கிய ஆயுதங்களாக விளங்கும் அதேநேரம், போதிய அளவு ஆட்தொகையும் மரபுவழிச்சமருக்கு அவசியம். சிங்களப்படைக்கு இவை அனைத்தும் இருக்கின்றன. புலிப்படையைப் பொறுத்தவகையில் இவற்றில் சிலது முழுமையாக இல்லை, மற்றையவை மட்டுப்படுத்தப்பட்டளவில் உள்ளன. இந்த படைக்கலவளச் சமநிலையில் குறைவாக உள்ளபடை [புலிப்படை] மற்றைய படையைவிட [சிங்களப்படை] அதிகளவு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உணவு – உறக்கம் – ஓய்வு போன்ற அத்தியாவசிய விடயங்களிலும் அது பல நெருக்கடிகளைச் சந்திக்கவேண்டியேற்படும். இத்தகைய சவால்களுக்கும் - நெருக்கடிகளுக்கும் முகங்கொடுத்தபடி, புலிப்படை, வீரமாகப் போராடுகின்றது.

30 கி. மீ. நீளமான ஜயசிக்குறுய் சமர்க்களத்தின் பிரதான பொருதுகளமாக ஒரு சில கிலோமீற்றர்களைக் கொண்ட புளியங்குளம் சண்டைமுனைகளே விளங்குகின்றன. சந்திப்பகுதிக்கு அருகில் நிலைகொண்டிருந்தவாறு, சந்தியைக் கைப்பற்ற எதிரிப்படை எடுக்கும் தீவிரமுயற்சிகளும், அதைத்தடுக்க தமிழர் சேனை தொடுக்கும் கடுமையான எதிர்த்தாக்குதல்களாலும் புளியங்குளம் சந்தி தீவிர சண்டைக்களமாகியுள்ளது. சிலநூறு மீற்றர்கள் இடைவெளிக்குள் இருபகுதிப்படைகளும் நிலைகொண்டவாறு- தடுப்பு அரண்களையும், பதுங்ககழிகளையும் அமைத்து-சண்டையிட்ட வண்ணமுள்ளன.

பங்கர்ச்சண்டைகள் என்ற இராணுவ பரிமாணத்தில் புளியங்குளம் சண்டைகள் இடம்பெறுகின்றன. படையினரின் கண்ணெதிரிலேயே புலிகளின் அரண்களும் உள்ளன. போராளிகள் நிலைகொண்டுள்ள இடங்கள் – பயன்படுத்தும் வழிகள், பாதைகள் பகைவனுக்கும் தெரியவரும். இது, பகைவனின் எறிகணைவீச்சிற்கு வாய்ப்பான சூழல் –

சண்டையில்லாத நேரங்களில் வந்து விழும் எறிகணைகளிலிருந்து காப்புத்தேடுவது வேறுவிடயம், சண்டைநேரங்களில் மழைபோல் வந்துவிழும் எறிகணைத்தாக்குதல்களுக்குத் தற்காத்தபடி – முன்னேற முனையும் எதிரிப்படையுடன் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபடுவது வேறு விடயம். நிலமட்டத்திற்குமேல் தலைகளை உயர்த்த எறிகணைகள் விடாது. ஆயினும், தலையை வெளியே நீட்டி–எதிரியைக் குறிபார்த்து– அவனைத் தாக்கிக்கொல்லவேண்டும். தாமதித்தால் அவன் கொன்றுவிடுவான். செக்கனுக்கு ஐந்தோ – பத்தோ அதனிலும் கூடவோ எறிகணைகள் வெடிக்கும். கோடைகால இடிமுழக்கம்போல காது செவிடுபடும்படி தொடர்ச்சியாகஎறிகணைகள் வெடித்து – முழங்கும். வெடி அதிர்வுகளால் உடல் அதிரும் - ஆனாலும் உள்ளம் பதறாது நின்று போராடவேண்டும். இந்த வெடிமுழக்கச்சத்தங்களையும் ஊடறுத்தவாறு எமது செக்சன்லீடர்களினதும் – பிளட்டூன் தலைவர்களினதும் கட்டளைச் சத்தங்கள் சகபோராளிகளின் காதுகளுக்குக் கேட்கவேண்டும். எதிரி நிற்கும் திசையை சுட்டிக்காட்டி, சகபோராளிகள், வெறும்வாயால், கத்திக்கூறும் ஆலோசனைகளும் - எச்சரிக்கைகளும் குழுத்

தலைவர்களுக்கு கேட்கவேண்டும். எறிகணைத்துண்டுகள் வெட்டி, ரவைக்குண்டுகள் கிழித்து காயம்பட்டுவீழும் அன்புத் தோழர்களின் அலறல் ஓசைகளும் இடையிடையே கேட்கும். இவ்வளவையும் கிரகித்துக்கொண்டு, இத்தனையையும் சகித்துக்கொண்டு முன்னால் நகரமுனையும் எதிரிமீதே கண்களை ஒட்டவைத்து – சுட்டுக்கொண்டிருக்கவேண்டும்.

புலிகளின் பங்கர் அரண்களை உடைத்தெறிய எறிகணைகள் தவறினால், தனது ராங்க்குப்படையை - பகைவன்- அரணுடைக்க ஏவிவிடுவான். தனியன் யானைகள்போல உறுமிக்கொண்டு சண்டை வலயத்திற்குள் நுழையும் சிங்களத்து ராங்க்குகள் கவசம் தரித்தவை. உருக்குக்கவசம் உடுத்தபடி ஓடிஓடிக் குண்டேவும் எமனின் வாகனங்கள் இவை. புலிகளின் தாக்குதல் வலயத்திற்குள் இந்தக் கவசப்பீரங்கிகள் வரும்வரை, தூரத்திலிருந்து அவை எறியும் நீளக்குண்டுகளை புலிவீரர்கள் தாங்கத்தான் வேணடும். குண்டேவிக் குண்டேவீ நகரும் கவச அரக்கனுடன் கூடவரும் புழுதிமண்டலத்திற்குள், தூர இருந்தபடி கண்களை ஆழமாகச்செருகி – சரியாக அதனை அடையாளம் கண்டு – அடிக்கவேண்டிய இடத்தில் குறிதவறாது அடிக்கவேண்டும். அப்போதுதான் எமனின்வாகனம் எரியுண்டுபோகும். ஆர். பி. ஜீ. யிலிருந்து ஏவப்படும் ராங்க் எதிாப்புக்குண்டுகள் சக்திவாய்ந்தவைதான். ஆனால், ஒரு குண்டில், எய்தவனைத்தவீர, மிகுதி எல்லாவற்றையும் எரித்து அழிக்கும், திரைப்படக்காட்சிபோல, அநதக்குண்டுகள் மாய சக்திபடைத்தவையல்ல. அல்லது, எய்தால் கட்டாயம் இலக்கை வீழ்த்தும் நாகாஸ்த்திரமும் அல்ல. ராங்க் எதிர்ப்புக்குண்டெய்யும் புலிவீரனின் குறிபார்க்கும் திறன் – பதறாத மனஉறுதி – வீழ்த்தியே தீரவேண்டும் என்ற ஓர்மம் இவை ஒன்றுசேரும் போதுதான் ராங்க் எரியும். ஆயினும், இவைகள் ஒன்றுசேர களப் பூகம்பம் பெரும்தடையாக இருக்கும்.

சிலவேளைகளில், புலிவீரர்களின் அரண்களைக்கடந்து அதற்குமேலால் ஏறிமிதித்தபடி ராங்க்குகள் உள்நுழையவும் கூடும். அந்த நேரங்களில் அரணைவிட்டு வெளியேவந்து, உயிரை ஒருகையிலும், கழற்றிய கைக்குண்டை மறுகையிலும் கொண்டேந்தியோடி கவச அரக்கனை அழிக்கமுயலும் வீரகாவியங்கள ஒரு சிலரின் கணமுன்னால் அரங்கேறும்.

தாக்குதல் உலங்குவானூர்திகளைக் கொண்டும், கிபிர்களைப் பயனபடுத்தியும் புலிகளின் காப்பரணகளைத் தாக்கி நகர்வுப்படைக்கு முன்னால் உள்ள தடைகளை அகற்ற பகைவன் முயல்வான். எறிகணைமழை ஓயும் ஒரு கணப்பொழுதில், குஞ்சைத்தூக்கவரும் பருந்துபோல வானிலிருந்து, சத்தமின்றி, கிபிர்கள் சறுக்கிவரும். 'வண்டுகள' எடுத்த படங்களை வழிகாட்டியாகக் கொண்டு தாககுதலை நடாத்தும். ஆகக்குறைந்த உயரத்தில் – தாழப்பறக்கும் சண்டைக்கெலிகள் வேகமாகத்தாக்கவரும். இறக்கைகளை விரித்துப்போட்டதுபோல, மிரட்சியூட்டியபடி மிதந்துவரும இந்தப்பறக்கும ராங்க்குகளை சாதாரண ஆயுதங்களாலும் அடித்து வீழ்த்தமுடியும். அதை ஓட்டிவரும் பகைவனுக்கும் அது தெரியும. ஆனால், இத்தகைய தாழப்பறப்பு இலக்கை அச்சொட்டாக அடித்து – அழிக்க அவனுக்குப் பெரிதும் உதவும். இதில முந்துபவர் வெல்வார். முந்துவதற்காக எம்தோழர்கள் எந்தநேரமும் வைத்தகண் வாங்காமல் விழிப்புநிலையில் வான்காவல் காக்க வேண்டும். அத்தகைய விழிப்பு நிலையிலேயே உண்ணவேண்டும். உறங்கவேண்டும்.

பங்கர்ச் சண்டையில் ஒவ்வொரு பதுங்ககழியும் – ஒவ்வொரு காப்பரணும் ஒரு கோட்டை போலச் செயற்படும். தங்குமிடமும் அதுதான். பாதுகாப்பையும் அதுதான் வழங்கும். உணவும் – ஓய்வும் அதனுளளேதான், உறக்கமும் அதற்குள்ளேதான். மழைபொழிந்து அகழிகள் நனைந்தால் ஒவ்வொரு கோட்டையும் சேறாகும் – ஈ, நுளம்புகளின் இருப்பிடமாகும். சேற்றுக்குள் உறங்கவேண்டும்; சகதிக்குள் இருந்து உண்ணவேண்டும்; ஈ, நுளம்புகளுடனும் போராடவேண்டும். எதையும் எதிர்கொள்ளவேண்டும். எதையும் எதிர்பார்க்கவேண்டும். ஆனால், எதிரியை எழுந்து நடக்க அனுமதிக்கக் கூடாது. இவைதான் சமர்முனைவிதிகள். எதிரி ஏவியகுண்டுகளால் உருக்குலைந்து போகும் ஒவ்வொரு கோட்டையையும் இயன்றளவுக்கு விரைவாக மீளஅமைத்து, பகைவனின அடுத்தகட்டத் தாக்குதலை எதிர்கொளளத் தயாராகவேண்டும். துப்பாக்கிக்கு ஓய்வுகிடைக்கும் போது அதே கைகள் மண்வெட்டியை பிடிக்கவேண்டும். துப்பாக்கிக்கும் ஓய்வுகிடைக்கும். மண்வெட்டிக்கும் ஓய்வுகிடைக்கும். அவற்றைப் பிடிக்கும் புலிவீரர் கைகளுக்கு ஓய்விருக்காது. ஓய்வு என்பது சமர்க்கடவுளுக்கு பிடிக்காத ஒன்று. அதை அடைய அதிக ஆசைப்பட்டால் வெற்றித் தேவதை எங்களை விவாகரத்துச்செய்துவிடுவாள்.

சமர்க்களத்தில் சண்டைகள இல்லாத நாட்களும் உண்டு சண்டைகள் அற்ற நாட்களே பதுங்கிச் சுடுபவனின் வேலை நாள். இந்த நிழல் மனிதன் அபாயகரமானவன். சண்டைக்களத்தின் வேட்டைக்காரன் இவன்தான். உயரமான இடங்களில் ஒரு திட்டியாகவும்– கட்டட இடிபாடுகளுக்கிடையில் ஒரு சிதைவைப்போலவும் - உயர்ந்த மரத்தில் ஒரு கிளையைப் போலவும் கரந்துறைந்து இரைக்காக காத்துக்கிடப்பான். எதிரிநிலைகளை நோட்டமிட தலையைத் தூக்கும் போது எங்கிருந்தோ இவன் அடிப்பான். வெளியில் அரணமைக்கும் போது இந்த நிழல் மனிதன் சுடுவான். அடுத்த அரணுக்கு நடந்து செல்லும் போது இவன் ரவையனுப்புவான். சூட்டுச் சத்தங்கள் காதை வந்தடையமுன் ரவைக்குண்டுவந்து உயிர்குடிக்க முந்தும். எதிரிப்பிரதேசத்தில உயிர் வேட்டையாடுவதற்காக ஒரு பதுங்கிச் சுடும் புலிவீரன் தனது நிலையில் பிணமபோல அசையாது காத்துக்கிடப்பான். அவதானமற்ற அசைவு- அஜாக்கிரதையான நகர்வு களமுனையில் தடை செய்யப்பட்டுளளது. தவறுபவர்கள் யாராக இருந்தாலும், ரவைகளால் தண்டிக்கப்படுவோர்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக நிலம் பிடிக்க முயலும் துப்பாக்கிச் சண்டை உக்கிரமாக நிகழும். புலிகளின் பங்கர்களை அடையவேண்டுமாயின், பகைவன், தனது பங்கர்களை விட்டு வெளியே வரவேண்டும். பகைவனை வீழ்த்தவும் - வீழ்த்தியவனின் படைக்கலங்களைக் கைப்பற்றி எடுக்க வேண்டுமாயின் புலிவீரர்கள தத்தமது பங்கர்களை விட்டு வெளியேறி வர வேண்டும்.எதிரியின் ஆட்பலம் எப்போதும் அதிகம் தான். அவன் செலவிடும் ரவைகளும் - குண்டுகளும் அதிகம்தான் பகைவனின் ரவைகளுக்கு - எறிகணைகளுக்கு புலிகள் நிற்கும் திசைதான் இலக்கு. புலிகளின் ரவைகளுக்கு - எறிகணைகளுக்கு பகைவனின் உடல்தான் இலக்கு.

புலிவீரர்களின் மன உறுதி சாதாரணமானதல்ல. அவர்களின் அர்ப்பண உணாவு உலகமே வியந்து பாராட்டுவது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த மன உறுதியும் அர்ப்பண உணர்வும் பகைவனின் இராணுவ நோக்கங்களுக்கு பாரிய தடையாக இருந்துவருகின்றது. ஜயசிக்குறுய் படைக்கும் அதுவே மிகப்பெரும் சவாலாக விளங்குகின்றது. சண்டைகளின் நிலைமைகளுக்கு ஏற்றவாறு - பகைவனின் வியூகங்களுக்கு தகுந்தவாறு பதில் நடவடிக்கை எடுப்பதற்குரிய ஆலோசனைகளை- தந்திரோபாயங்களை, தலைவர் பிரபாகரன் அவர்கள், உடனுக்குடன் வகுத்துக் கொடுத்து களத்தை வழிப்படுத்துகின்றார். அவற்றை நடைமுறைப்படுத்தி, புலிவீரர்கள். வரலாறு படைக்கிறைனர். ○

# போரராளியின் காதலி !

செய்தித்தாள்
வானொலி
அவதியில் திரியும் விமானங்கள்
காற்றை வருத்தும் போரின் ஊளை
இவை போதாதா?
உன் இருப்பின் அந்தரிப்பை உணர்வதற்கு.

மெலிந்து
கண்ணோரங்களில் கருமைபடிந்து
ஆனால் புலனைந்தும் மிக விழிப்புற்று
மண்ணிலொரு பிடியெனினும்
அள்ளவரும் கைதறிக்க காத்திருக்கிறாய்
ஒரு பொறியென நீ.



திறந்த பதுங்ககழியில்
சற்றேனும் விழிமூட கிடைத்த சிறுபொழுதில்
களைத்த விழிகளைக் குவித்தபடி
உன் எண்ணங்கள் யாரை வட்டமிடும்!
என்னைத்தானே?
[சுயநலம்தான்
ஆனாலும் அப்படி ஏங்கும் மனசுக்கு
கடிவாளமில்லையே என்னிடம்]
அல்லது உன் அம்மாவையா?
இல்லை ஒற்றைத் தங்கையையா?
எல்லோரையும் ஒதுக்கிவிட்டு
எதிரியின் அடுத்த நகர்வையா?

கௌரி நோன்பு
சஷ்டி நோன்பு
சதுர்த்தி நோன்பு
வெள்ளி நோன்பு என
நீளும் நாளெல்லாம் நோன்பிருந்து
நீ வருந்தா வரம் வேண்டி
நான் வருந்தித் தொழுகின்றேன்.
மனசுக்குள் –
உன் பதுங்ககழியின் சுவரில்
வைரவர் சூலம் வரைகிறேன்.
வேறு என்னதான் செய்வது நான்
ஒரே தவிப்பாக இருக்கிறது எனக்கு.

மெலிந்துபோவதாயும்
கண்ணோரங்களில் கருமைபடிவதாயும்
அடிக்கடி
புலனறுந்து சூனியத்தை வெறிப்பதாயும்
பெற்ற வயிற்றுக் கொதிப்பைக்
கொட்டுகிறாள் அம்மா.
பெற்ற வயிறு மட்டுமா கொதிக்கும்?

போராளியின் தாயென்ற பெருமிதம்
விகசிக்கும் முகத்தினளாய்
காட்சிகளில துலங்குகிறாள் உன் அம்மா.
பொருளறியாப் பொறாமையில் கசங்குது மனசு.
போராளியின் காதலி என்ற பூரிப்பு
ஒளிர்கிறதா என் முகத்தில்?
மற்றவர்களுக்கு எப்படியோ!
கண்ணாடி சொல்கிறது
பூரிப்பில் மிளிருதென் முகமென்று.

நேற்று
ஒரு பெண் போராளிக்கு
அஞ்சலிக்கவிதை எழுதினேன்.
உனது நிலைக்கு
அடுத்தடுத்த நிலையொன்றில்தான்
அவளும் வீரச்சாவடைந்திருக்க வேண்டும்,
அவளின் உடல் கிடைக்கவில்லை.
எழுதத் தொடங்கியது முதல்
அபத்தமான சிந்தனைகளில் சிக்கி
அலைக்கழிந்தது மனம்.
அழவேண்டும் போல் இருந்தது எனக்கு.
அந்தக் கவிதை மிகநன்றாக இருந்ததாக
பலரும் சொன்னார்கள்.
எனக்குப் பிடிக்கவில்லை. ○

– எஸ். உமாஜிப்ரான்



# சேகுவேரா திரும்பி வந்துவிட்டார்

'சே' ஒரு சர்வதேசப் புரட்சியாளன். முதலாளித்துவத்தின் கொடூரப்பிடிக்குள் இருந்து உலக மாந்தரை மீட்கவேண்டும் என்பது அவரின் கனவு. முதல்கட்டமாக இலத்தீன் அமெரிக்க நாடுகளை விடுவிக்கவேண்டும் என்று அவர் விரும்பினார். பிடல் கஸ்ரோவுடன் இணைந்து கியூபப்புரட்சியை நடாத்தினார். கியூபா விடுதலையான பின் அடுத்த புரட்சிக்காக பொலீவிய நாட்டைத் தேர்ந்தெடுத்தார். இதே வேளை, அறுபதுகளில் திரம்பெற்ற ஆபிரிக்கப் புரட்சி அலைக்கும் 'சே' ஊக்கம் கொடுத்தார். இன்று கொங்கோ என அழைக்கப்படும் சயர் நாட்டின் போராட்டத் தலைவன் லுமும்பாவை

**1967 ஆம் ஆண்டு பொலீவியாவில் கொல்லப்பட்ட சேகுவேராவின் எலும்புக்கூடு அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் காவியநாயகன் 'சே' யின் நினைவுகள் மீண்டும் கிளறப்பட்டுள்ளன.**

ஆயிரத்துதொளாயிரத்து அறுபதுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அச்சுறுத்திக் கொண்டிருந்த தனிமனிதர்களில் சேகுவேரா முக்கியமானவர்.

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் வாழும் ஏழை மக்களின் இதயத்து இளவரசனாகவும் – உலக விடுதலை வீரர்களின் ஆதர்சபுருசனாகவும் சேகுவேரா விளங்கினார். இதேவேளை சர்வதேச முதலாளித்துவத்திற்கும் – இலத்தீன் அமெரிக்கச் சர்வாதிகாரிகளுக்கும் சேகுவேரா என்ற பெயர் சுழன்றடிக்கும் ஒரு புயலாகவே இருந்தது. ஆர்ஜென்டினாவில் உருவாகி, கியூபாவில் மையங்கொண்டிருந்த இந்தப் புரட்சிப்புயல், 1967 ஆம் ஆண்டு பொலீவிய நாட்டின் மலையடிவாரக் கிராமமொன்றில் அடங்கிப்போனது.

உயிருடன் இருந்த சேகுவேராவுக்குப் பயந்ததுபோல உயிரற்ற அவரின் உடலுக்கும் ஏகாதிபத்தியம் பயந்தது. அவரைக்கொன்று – அவரது உடலை எங்கேயோ புதைத்து – மறைத்துவிட்டது. 'பொலீவிய மக்களுக்கெதிராக சேகுவேரா பல கொடுமைகளை இழைத்தார்.' என்று விடாது பிரச்சாரம் செய்து – அவரது புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்தவும் ஏகாதிபத்தியம் முயன்றது.

'சே' யின் உயிரற்ற உடல் கண்டுபிடிக்கப்பட்டால் சோம்பல் நிலையில் கிடக்கும் இலத்தீன் அமெரிக்கப் புரட்சி உயிர்பெற்றுவிடும் என்று சி. ஐ. ஏ. அஞ்சியது. அதனால், உடல் பற்றிய பொய்யான தகவல்களை பல்வேறு நபர்களுக்கூடாக கூறவைத்து - உடலைத்தேடும் முயற்சியை தோல்வியடையச் செய்ய சி. ஐ. ஏ. முயன்றது. ''சே யின் உடல் எரிக்கப்பட்டுவிட்டது'' என்றே 'சே' யை கைதுசெய்த பொலீவிய இராணுவக் கேணல் இறுதிவரை கூறினார்.

சேகுவேராவின் இறுதிக்கணங்கள் எப்படிக் கழிந்தன? அவரின் உடலுக்கு என்ன நடந்தது? என்ற இரண்டு கேள்விகளுக்குமான விடையை தெரிந்துகொள்ள விடுதலையை நேசிக்கும் உலக மக்கள் துடித்தனர். அவரின் இறுதிக் கணங்கள் பற்றிய சில தகவல்கள் பொலீவிய இராணுவத்திற்கூடாகவும் கிராம மக்களுக்கூடாகவும் உலகிற்கு, முன்னரே, கசிந்திருந்தன. ஆனால், உடல் பற்றிய தகவல் மட்டும் விடுவிக்கமுடியாத புதிராக இருந்தது. அந்தப் புதிர்முடிச்சை பொலீவியாவின் முன்னாள் இராணுவத் தளபதி ஒருவர், அண்மையில், அவிழ்த்து 'சே' யின் நினைவுகளை கிளறிவிட்டிருந்தார்.

'' கைவிடப்பட்ட நிலையில் – புதர்மண்டிக் கிடக்கும் ஒரு சிறிய முன்னாள் விமானத்தளத்தின் ஓடு பாதையின் ஓரத்தில் 'சே' யினது உடல் அவசரம் அவசரமாகப் புதைக்கப்பட்டது'' என்ற தகவலை அந்த இராணுவத் தளபதி வெளியிட்டிருந்தார். அதன்பின், அவரது உடலைத் தேடிக்கண்டுபிடிக்கும் பணி சூடுபிடித்தது. கியூபா – ஆர்ஜென்டினா – இத்தாலி நாட்டு நிபுணர்கள் ஒன்றுசேர்ந்து அந்த விமானத் தளப் பகுதியில் அகழ்வு வேலைகளை ஆரம்பித்தனர். பல்வேறு தடைகளுக்கு மத்தியில் - 18 மாதகால தேடுதல் முயற்சியின்பின் அந்த புரட்சிவீரனின் எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது விஞ்ஞானப் பரிசோதனைகள் மூலம் உலகிற்கு அது உறுதிப்படுத்தப்பட்டது.

சி. ஐ. ஏ. – அன்று, கொலை செய்திருந்தது. இதனால், கொங்கோபுரட்சி நிலைதடுமாறியது. அந்த நெருக்கடியான கட்டத்தில் – ஆபத்திற்கும் மத்தியில் – கொங்கோ நாட்டிற்கு இரகசிய விஜயம் மேற்கொண்ட 'சே', புரட்சித்தீயை அணையவிடாது பாதுகாக்க பல உதவிகளைச் செய்தார். அண்மையில் வெற்றிபெற்ற கொங்கோ புரட்சியின் நாயகன் கபீலா; 'சே' யிடம் உதவியும் – ஆலோசனைகளும் பெற்ற அன்றைய கெரில்லாத் தளபதியாகும். பெரும்பாலான இலத்தீன் அமெரிக்கப் புரட்சி இயக்கங்கள் 'சே' யை தமது மானசீகக்குருவாகக் கருதுகின்றன. மெக்சிக்கோ நாட்டின் சியாப்பஸ், பேரு நாட்டின் ரூபக் அமாறோ, நிக்கரகுவாவின் சன்டினிஸ்டா இயக்கம் போன்றவை அதில் குறிப்பிடத்தக்கவையாகும்.

கெரில்லாயுத்தம்பற்றிய 'சே'யின் கருத்துக்கள் உலகப்பிரசித்திபெற்றவை – உலகெங்குமுள்ள விடுதலை இயக்கங்கள் 'சே'யின் கெரில்லாப்போர் அனுபவத்தை முன்னுதாரணமாகக் கொண்டு தத்தமது போராட்டங்களை செழுமைப் படுத்தியிருக்கின்றன.

பொலீவியாவில் அவர் போராடிக்கொண்டிருக்கும்போது கெரில்லாப்போர் யுக்திகள்பற்றி- மக்களுடனான அணுகுமுறைகள் மற்றும் உறவுகள்பற்றியதுமான தனது அனுபவங்களை நாட்குறிப்பாக எழுதி – தன்னுடன் வைத்திருந்தார். 'சே' கொல்லப்பட்டபோது அவரது நாட்குறிப்புகளை ஒரு பொலீவிய இராணுவ வீரன் எடுத்து – தன்வசம் வைத்திருந்தான்.

*பல்வேறு தடைகளுக்கு மத்தியில் – 18 மாதகால தேடுதல் முயற்சியின் பின் அந்த புரட்சிவீரனின் எலும்புக்கூடு கண்டெடுக்கபபட்டது. விஞ்ஞானப் பரிசோதனைகள் மூலம் உலகிற்கு அது உறுதிப்படுத்தப்பட்டது.*

சில வருடங்களின்பின், அந்த நாட்குறிப்புக்களை ஒரு புத்தக வெளியீட்டு நிறுவனத்திற்கு விற்றான். ''பொலீவியன் டைரி'' என்ற பெயரில் 'சே' யின் அந்த அனுபவத் தொகுப்பு உலகமக்களின் கைகளில் கிடைத்தது.

'சே' இறந்தபின் அவரை ஒரு இரக்கமற்ற பயங்கரவாதியாகச் சித்தரிப்பதிலேயே ஏகாதிபத்திய ஆதரவுப் பத்திரிகைகள் முயன்றன. போராட்டம் என்ற பெயரில் கிராமமக்களை 'அவர்' துன்புறுத்தினார் என்று கற்பனைக்கதைகளுடனும் விடுதலைக்கெதிரான சிலரது செவ்விகளுடனும் கருத்துப்பரப்பலில் அவை ஈடுபட்டன. 'சே' க்கு எதிரான இந்த ஏகாதிபத்திய தொடர்புசாதனயுத்தம் உலகமக்களிடம் எடுபடவில்லை. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் வசிக்கும் பெரும்பாலான மக்களின் வீடுகளில் யேசுநாதரின் படத்திற்கு அடுத்ததாக 'சே' யின் படத்தையே தொங்கவிட்டுள்ளனர். மயிரடர்ந்த முகத்துடன் சாந்த சொரூபியாகத் தென்படும் 'சே' யின் முகச்சாயல் யேசுநாதரின் முகச்சாயலுடன் ஒத்திருக்கின்றது என்று பெரும்பாலான இலத்தீன் அமெரிக்கமக்கள் நம்புகின்றனர்.


பிரிட்டனில் இருந்து அமெரிக்காவரை 'சே' யின் முகம்பதித்த 'ரிசேட்டுகள்' இலட்சக்கணக்கில் விற்பனையாகின்றன. இலத்தீன் அமெரிக்க மக்கள் மட்டுமல்ல ஐரோப்பிய - அமெரிக்க இளைஞர் – யுவதிகளும் 'சே' யின் முகம்பதித்த ஆடைகளை விருப்புடன் வாங்கி அணிகின்றனர். மக்களுக்காகப் போராடிய – மக்களின் விடுதலைக்காக மரணித்த இந்த ஆற்றல்மிகுவீரனை 'உலகம்' காவியத்தலைவனாக ஏற்று – மதிக்கின்றது.

கடந்த யூலை மாதம் 8ம் திகதி 'சே' யினதும் அவருடன் கொல்லப்பட்ட சகதோழர்கள் நால்வரினதும் எலும்புக் கூடுகள் அடங்கிய பேழைகள் கியூபா வந்தடைந்தன. கியூபாவின் புரட்சித்தலைவரும் – 'சே' யின் நண்பனுமாகிய பிடல்கஸ்ரோ - புரட்சியின் நினைவுகளை மீட்டுப்பார்க்கக் கூடிய – அந்த உணர்வுச் சொத்துக்களை - உணர்ச்சி பொங்கப் பொறுப்பேற்றார். அந்த நிகழ்ச்சியில் 'சே' யின் மகள் உரையாற்றினார்.

> ''அவர்களுடைய எலும்புக்கூடுகள், இன்று, எங்களிடம் வந்தடைந்துள்ளன. எனினும் அவர்கள் தோல்வியுற்றுத் திரும்பவில்லை, கதாநாயகர்களாகத்திரும்பியுள்ளனர். உள்ளார்ந்த இளமையுடன் திரும்பியுள்ளனர். வீரர்களாகத் திரும்பியுள்ளனர்''

என்று வீரவணக்கம் செலுத்தினார்.

கியூபாவின் சாந்தாகினோறா என்ற இடத்தில் ஒரு அரும்பொருட்காட்சியகம், திறக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 'சே' யின் உடலிலிருந்து ஏகாதிபத்திய வெறியர்கள் துண்டித்த இரண்டு கைப்பாதங்களுடன் 'சே' யின் எஞ்சிய எலும்புக்கூடும் ஒன்றிணைந்துள்ளது. இலத்தீன் அமெரிக்கமக்களின் உணர்ச்சிமிகு விடுதலைச் சின்னமாக எதிர்கால சந்ததிக்கு – 'சே' யின் எலும்புப் பேழை விளங்கும். ○



'சே'யின் எலும்புப் பேழை கையேற்கும் வைபவத்தில்:
'சே'யின் மகள் உரையாற்றுகிறார். பேழையின் அருகில் நிற்பவர் பிடல் கஸ்ரோ.

# சேகுவேரா பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்

★ 1967 ஒக்ரோபர் 9ஆம் திகதி லாகியூறா என்னும் இடத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கைதியாக வைக்கப்பட்டிருந்த சேகுவேரா சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது சடலம் அங்கிருந்து அதிகதூரத்தில் இருந்த இராணுவத் தளம் ஒன்றுக்கு ஹெலி மூலம் கொண்டு செல்லப்பட்டது.

★ கொல்லப்படுவதற்கு முன்னர் சேகுவேரா கடைசியாகக் கூறிய வார்த்தைகளை பொலீவிய இராணுவத்தின் எட்டாவது படைப்பிரிவின் உளவுத்துறை அதிகாரியான கேணல் ஆர்னல்டோ தமது உத்தியோகபூர்வ அறிக்கையில் வெளியிட்டார். அது பின்வருமாறு காணப்பட்டது.

'' நீ என்னைச் சுடப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும். இதிலிருந்து என்னால் தப்ப முடியாது. இந்தத் தோல்வி புரட்சியின் முடிவு அல்ல; அது தொடர்ந்து எங்கும் எதிரொலித்துக்கொண்டே இருக்கும் என்று பிடலிடம் சொல்லுங்கள். மறுமணம் செய்துகொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து பிள்ளைகளின் படிப்பை கவனிக்குமாறு அலெஸ்டாவிடம் ( சேகுவேராவின் மனைவி ) கூறுங்கள் ''

★ 1928 ஜூன் 14 ஆம் திகதி ஆர்ஜென்ரினாவிலுள்ள றொசாரியோ நகரில் சேகுவேரா பிறந்தார் அவரது இயற்பெயர் ஏர்னெஸ்ரோ குவேரா: ஆனால், சிறு வயதில் அவரை எல்லோரும் அன்பாக 'சே' என்று அழைத்தார்கள்: அன்பாக அழைக்கப்பட்ட 'சே' என்ற பெயர் பிற்காலத்தில் உலகசரித்திரத்தில் இடம்பெற்றுவிட்டது.

★ 1946 – 1953 ஆம் ஆண்டு காலகட்டத்தில் புவனர்ஸ் அயர்ஸ் தேசியப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ மாணவனாக கல்வி கற்ற சேகுவேரா, 1953 ஆம் ஆண்டு ஒரு சத்திர சிகிச்சை நிபுணனாகவும், தொழுநோய் சிகிச்சை நிபுணனாகவும் மருத்துவ கல்லூரியில் இருந்து வெளியேறினார்.

★ கௌதமாலாவின் ஜனாதிபதி அபென்சின் ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக நடந்த கிளர்ச்சியில் சேகுவேரா பங்குகொண்டார். தோல்வியில் முடிந்த அந்தக் கிளர்ச்சிக்குப் பின் மெக்சிக்கோ திரும்பிய அவர், அங்குள்ள இருதய மருத்துவமனை ஒன்றில் பணியாற்றினார். அங்குதான் தற்போதைய கியூபா அதிபரும் கம்யூனிஸ கெரில்லாத் தலைவருமான பிடல் கஸ்ரோவை முதன் முறையாக 'சே' சந்தித்தார். இந்தச் சந்திப்பே லத்தீன் அமெரிக்க நாடுகளில் உருவான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டங்களுக்கு வித்தாக அமைந்தது.

★ 1956 ஆம் ஆண்டு மெக்சிக்கோவின் டுக்ஸ்வான் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட பிடல் கஸ்ரோ தலைமையிலான 81 பேர் கொண்ட கெரில்லாக் குழுவில் ஒருவராக சேகுவேராவும் இடம்பெற்றார். அந்தப் புரட்சிக் குழுவின் தலைவர் பிடல் கஸ்ரோவுக்கு அடுத்த நிலையில் அவரது சகோதரர் ராவுல் கஸ்ரோவும் மூன்றாவது நிலையில் சேகுவேராவும் இருந்தனர்.

★ கியூபாவில் இருந்து புரட்சிகர கெரில்லா யுத்தத்தை லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு விரிவுபடுத்திய சேகுவேரா, 1966 ஆம் ஆண்டில் தமது அணியினருடன் பொலீவியாவின் தென் கிழக்குப் பகுதியூடாக அந்நாட்டினுள் நுழைந்து, பொலீவிய இராணுவத்திற்கு எதிராக துணிகர தாக்குதல்களை நடாத்திவந்தார்.

★ 1967 ஒக்ரோபர் 7 ஆம் திகதி உருளைக் கிழங்கு பயிரிடும் விவசாயி ஒருவனால் காட்டிக் கொடுக்கப்பட்டு, சேகுவேராவும் அவரது சகாக்கள் 17 பேரும் சுரங்கப்பகுதி ஒன்றினுள் வைத்து பொலீவியப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு கடும் சமரின்பின் கைது செய்யப்பட்டனர்.

★ சி. ஐ. ஏ. யின் நிர்ப்பந்தத்தின் பேரில் விடுக்கப்பட்ட உத்தரவின்படி சேகுவேராவைக் கொல்வதற்கு சிப்பாய் ஒருவன் லொத்தர் மூலம் தெரிவு செய்யப்பட்டான்.

★ 'சே' கொல்லப்பட்ட கிராமமான லாகியூறா மக்கள், அவரை ஒரு புனிதராகப் போற்றுகின்றனர். வறட்சி நிலை தீவிரமடையும்போது 'சே' யின் படங்களை தூக்கியவாறு. மழை வேண்டி நடனமாடுகின்றனர். யேசுநாதரைப் போல மயிரடர்ந்த முகத்தைக் கொண்ட இந்தப் புனிதர் ('சே') தமக்காக மழையை அனுப்புவார் என்று அக்கிராம மக்கள் இன்றும் நம்புகின்றனர். ○



# விலை!

போராட்டத்திற்குக் கவசமாய் இருந்த ஏராளமான குடும்பங்களுள் அம்மாவினுடையதும் ஒன்று.

தென்மராட்சியின் மையமாய் உள்ள மீசாலை ஊர்தான் அந்தக் குடும்பத்தின் மடி.

ஒன்றொன்றாக அம்மாவின் பிள்ளைகளில் மூவர் இயக்கத்துக்குப் போய்விட்டனர்.

முதலில் போனவன் சேகர்.

மதுவன் அடுத்ததாகப் போனான்.

கேரதீவு இறங்கு துறையில் இந்திய வானூர்திகள் பொழிந்த நெருப்பு மழையில், கண்களுக்கு முன்னால் கருகிப்போன அப்பாவைப் பறிகொடுத்து விட்டு, கதறிக் கொண்டு வந்தவன் அவன். நெஞ்சுக்குள் கனன்று கொண்டிருந்த அந்த நினைவோடேயேதான் மதுவன் புறப்பட்டுப் போனான்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு கான்சும் வெளிக்கிட்டுப் போய்விட்டான்.

அம்மாவுக்குத் துயர் இயக்கத்திற்கு போனதற்காக அல்ல; மூவரும் போய்விட்டதற்கு.

அம்மா தலைவருக்கு வேண்டுகோள் எழுதினாள் - '' தயவு செய்து மதுவனை மட்டும் என்னிடம் அனுப்பி வையுங்கள் ''.

மதுவன் கடைசிப் பையன். பெற்றவர்களின் அபரிமிதமான பாசம் அவன் மேல் இருந்தது. வீட்டு வேலைகளிலெல்லாம் அம்மாவின் 'கையாள்' அவன்தான்.

அம்மா காத்திருந்த தலைவரின் பதிலோடு மூத்தவன் சேகர் வீட்டுக்கு வந்த ஒரு மகிழ்வான இரவு. அந்தச் சந்தோசத்தில் அம்மாவுக்கு தூக்கமே வரவில்லை. அம்மாவுக்குச் சேதியைச் சொன்ன சேகர், இரவோடு இரவாகவே தம்பியைக் கூட்டி வர மணலாற்றுக்குப் பயணமானான்.

மறுநாள் - மணலாற்றில், ஒரு வழியாக அன்பு அண்ணனைத் தேடிப்பிடித்துச் சந்தித்து, கடிதத்தைக் கொடுத்துக் கதைத்தபோது – சண்டை ஒன்றுக்காக சற்று எட்டத்திற்குப் போய்விட்ட ஒரு தாக்குதலணியில் மதுவனும்போன தகவலைச் சொன்ன அன்பு அண்ணன், இரண்டு நாளில் அந்த அணி திரும்பிவிடுமென்றும், நின்று அவனை அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக் கொண்டார்.

இரண்டு நாட்களாகத் தம்பிக்காகக் காத்திருந்தான் சேகர். முந்திரிகைக் குளம் என்ற ஊருக்குப் பக்கத்திலிருந்த இராணுவ மினி முகாமைத் தாக்கி அழித்த அந்த அணி, இரண்டாம் நாள் திரும்பியது.

சேகர் ஆர்வத்தோடு தம்பியைத் தேடிய வேளை, முகாமிலிருந்த எல்லோரும் அந்த வீரர்களைச் சூழ்ந்து கொண்டபொழுது – வெற்றியோடு மீண்ட தோழர்களின் தோள்களில் மதுவன் .. ....! அந்த வெற்றிக்கு விலையாகிப் போய்விட்ட மேஜர் சங்கர், மூசோலினியுடன் 2ஆவது லெப். மதுவன் .. !

சேகருக்கு தலை வெடித்துச் சிதறியதைப் போலிருந்தது.

தம்பியைக் கூட்டிவரப்போன அண்ணன், தம்பியின் உடலைக் கொண்டுவந்தான்.

எல்லாம் முடிந்து விட்டது.

இதன்பிறகு - அடுத்தவன் 'கான்ஸ்' ஐ இயக்கம் அம்மாவிடம் அனுப்பி வைத்தது.

அவனுக்கோ வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. 'இனிமேல் தலைவருக்குக் கடிதம் எழுதக் கூடாது' என்று எச்சரித்து விட்டு, ஒருநாள் மீண்டும் புறப்பட்டு போய்விட்டான்.

போனவன் - ஆனையிறவு படைத்தளத்திற்கான அரணிலிருந்து அடிக்கடி வந்து, அம்மாவை பார்த்துவிட்டுப் போனான்.

அம்மாவுக்கு உள்ளூரப் பயம் - ' சண்டையில நிற்கிறான் அவனுக்கும் ஏதாவது நடந்திட்டால் ... '.

ஒரு நாள் வீட்டுக்கு வந்தவன் அம்மாவுக்கு சேதி ஒன்றைச் சொன்னான்- '' என்னை வேறு இடத்திற்கு மாத்தியிருக்கு அம்மா. நாளைக்கு மட்டும்தான் ஆனையிறவில்; போகும் போது நாளைக்கு இங்கே வந்திட்டுப்போறன் ''

அம்மாவுக்கு ஆறுதல். இரவு நிம்மதியாக உறங்கிக் காலையில் எழுந்தாள்.

பின்னேரம் பிள்ளை வருவான். நல்ல சாப்பாடு செய்து கொடுக்க வேணும் – அம்மா ஆர்வத்தோடு சமயலறையில் மூழ்கிப் போனாள்.


மாலை வந்து இரவாகிய போதும்-பிள்ளை வரவில்லை. அம்மா காத்திருந்த போது அந்தச் செய்திதான் வந்தது.

அன்று காலை நடந்த சண்டையொன்றில் அம்மாவின் அந்த மைந்தனும் ... .......

கப்டன் கான்ஸ்

அம்மாவின் உச்சந் தலையிலிருந்து நுனிக்காலுக்கு மின்சாரம் பாய்ந்தது! ○

தி. இனியவன்



# அடையாளம் தெரிகிறதா?

ஆடியசைந்து
ஆனந்தக் கூத்தாடும்
தென்னைகள்... அதோ
பார்க்குமிடமெல்லாம் பனைகள்
அதற்கப்பால்... பச்சைப்
பயிர் நிலங்கள்
கணநேரம நேராய்
நடந்தால்... கருநீல
வானை தொட்டுவிடத்துடிக்கும்
வனாந்தரங்கள்
பின் நோக்க
வான வளைவை
முட்டிவிட்டாற் போல நிற்கும்
கடல் வெளிகள்
அலைகள் எழுந்தசைய
தென்றல் அசைந்து வருகிறது.

ஆ! .. இந்த மண்ணையா...?...நாம்
புழுதி அளைந்து மகிழ்ந்த
நம் சொந்த மண்ணையா...?
எத்தனை துரோகியடா இவன்...?
பிறந்த மண்ணையே
சிதைத்துவிடத் துடிக்கிறானே...!
பெற்றதாயையே
விற்றுவிட நினைப்பவன்
அவமானம்... அவமானம் - இந்த
மண்ணிலா இவனும் பிறந்தான்?
மண்ணைக்காக்க
மரணத்துள் வாழும் – மறவர்
பிறந்த மண்ணிலா ...?

எத்தனை கொடூரன்!
சுதந்திரத்தைத் தேடி - நாங்கள்
சுட்டெரிக்கும வெயிலில் நடக்கையில்
இவன்
சுகம்காணத் துடிக்கிறான்.
களம் மோதி கண்ணிழந்து - நாங்கள்
கரிய உலகைப் பார்க்கையில் – இவன்
கழுத்தறுக்க நினைக்கிறான்.
கண்களுக்குத் தெரிகிறதா... இவன்
பவ்வியமாய் பாசாங்கு செய்து - நம்
பக்கதில இருப்பது ..
அம்மா! தமிழ்த்தாயே!
உன் .. கண்களுக்கு தெரிகிறதா?
உன்னை விற்றிட நினைக்கும்
உன் மகன்
பக்கத்தில் தான் இருக்கிறான். O

செ. திருமாறன்

# உலகத் தமிழினமே! முழக்கம் இங்காகட்டும் முரசு உனதாகட்டும்

## உலைக்களம்

– வியாசன்



வெளியில் வரா்த குரல்களாக
விழுங்கப்படுகிறது எம்வர்ழ்வு.
மருத்துவர்களால் கைவிடப்பட்ட தீராப்பிணியனின்
சிரிப்புப்போலாச்சு எம் இருப்பு.
யாரொடு நோகலாம்?
யார்க்கெடுத் துரைக்கலாம்?
எத்தெய்வம் சபித்தது எம் தலையில்?
தீவொன்றில் தனித்துவிடப்பட்டவர்களாக நாங்கள்.
எவரெம் குரல்களை ;உலகுக்குச் சொல்வரோ?
எம்மை நோக்கிய வையவிழிகள் எப்போ திறக்கும்?
இருபத்தோராம் நூற்றாண்டுக்கு
தாலிகட்டத் தயாராகிறது உலகம்.
பதினாறாம் நூற்றாண்டிற் படுத்துக்கிடக்கின்றோம் நாம்.
நிரவமுடியாத அகழி.
நினைக்கமுடியாத தொலைவு.
குறுக்குவெட்டாக துண்டிக்கப்பட்டவனே உயிர்க்கும் போது
நெருப்புச்சுட்ட புண்ணுக்கே எங்களுக்கு மருந்து கிடையாது.
உலகெங்கும் அடித்துவிரட்டப்பட்ட மலேரியா கூட
ஓடிவந்து இங்கேதான் ஒதுங்கிக் கொண்டது.
தடிமன் மருந்துக்கே தட்டுப்பாடு.
இங்கு மருத்துவர்கள் கை பிடிப்பது
வைத்தியம் செய்யவல்ல......
வெறும் மன நிறைவுக்கே.
சுக்கும், மிளகும், சுடுநீருமே உயிரைத் தாங்கிக் கொள்கிறது.
எத்தனைக்கென்றுதான் அழுவது ?
ஊற்றடைத்துக் கொண்டது விழிக்கிணறு.
உலகமேன் ஊமையானது?
பூமிப்பந்தின் பரப்பெங்கும் தமிழன் இருக்கின்றான்.
எம் குரல்கள் மட்டும் ஏன் கேட்கவில்லை?
உறக்கம் கலைக உலகமே!
இங்கே சேடமிழுத்துக் கிடக்கிறது மனிதப்பிண்டம்.
இதற்காகவும் எவரெனினும் பேசுங்களேன்.
உரிமைக்குக் குரல் கொடுக்கும் ஒரு இனத்துக்கு
இதுதானா கதி ?
ஆரோகணித்திருக்கச் சிம்மாசனமா கேட்டோம்?
கால்மடித்திருக்கக் கதிரைதானே கேட்கின்றோம்.
இதற்காகவா இந்தப் பாரச்சிலுவை?
இயக்கர்களாக அவர்களும்......
நாகர்களாக நாங்களும்.... —
இல்லையெனில்......
அவர்களாக அவர்களும் .....
நாங்களாக நாங்களும் —...
இதுவுமில்லையெனில் —...
ஏதோ ஒரு வழியில்
ஒன்றாயிருந்த வீட்டிற்தானே உரிமை கேட்கின்றோம்.
பாதிவீட்டைத் தந்தாற்போதும்.
மீதி வீடு அவர்களுக்குத்தான்.
இந்தப் பிறிவிடுதலுக்கேன் இத்தனை கொதிப்பு?
மிஞ்சிய சோறுவாங்கிக் கும்பிடு போடுவதற்கு
நாங்கள் இராப்பிச்சைக்காரர்களல்ல.
தாம்பத்தியம் தள்ளாடும் போது
விவாகரத்துத்தான் விமோசனமளிக்கும்.
சமாதானத் தூதர்கள் தோற்றுப்போனபோது
பேச்சுவார்த்தை மேசையின் பூச்சழிந்த பின்னரே
நாங்கள் போருக்கெழுந்தோம்.
இடிக்க வந்தது மாடு.
அடித்தோம்.
மாட்டுக்கு அடித்தல் பாவமென மனுப்போர்டுபவர்களே!
எங்கள் கூட்டையே குலைத்தது குரங்கு.
குரங்கையேன் நீங்கள் குற்றம் காணவில்லை?
யானை வந்தழிக்கிறது எங்கள் புலவை.
வெடிகொளுத்திப் போடுகின்றோம்.
மிதிக்கும்போது ஊமையான வாய்கள்
கலைக்கும்போர்து மட்டும் கண்டிக்கின்றன.
எருமைத்தோல் உடுத்தவனா தமிழன்?
சுரணையற்றுக் கிடப்பதற்கு.
உதைத்த காலுக்கு முத்தமிட்டுக் கிடந்த
ஒரு இனத்தின் ஓரத்தில்
நெருப்புப்பொறியொன்று நீறுபூத்துக் கிடந்தது.
அது —... பிரபாகரன்.
கோபம் உரசியபோது தீக்குச்சி பற்றிக்கொர்ண்டது.
இன்று தீச்சுவாலை முளாசி எரிகிறது.
தர்மயுத்தமென்பதே தமிழீழப்போரானது.
பாச்சல் நடக்கும் போது
பாவ புண்ணியக் கணக்கு கொஞ்சம் கூடும், குறையும்.
அதற்கேன் இத்தனை ஒப்பாரி?
மரங்களைத் தறிக்காதே;
சூழலை மாசு செய்யாதே;
மிருகங்களை வதையாதே;
பூக்களைக் கிள்ளாதே என்று
குரல்கள் கேட்கின்றனவே.
ஈழத்தமிழனை எரித்து முடிக்காதேயென்று
உலகமுகடையிடிக்கும் குரல்கள் எப்போது எழும்?
அவலக்குரலை எப்போது உலகமறியும்.
எல்லைகளை;
வேலிகளை;
வரம்புகளைக் கடந்து
ஈழத்தமிழரைத்தாங்க நீளும் கரங்கள்
எப்போது கிட்டும்?
அழியும்வரை போராடுவோம் என்பதில் அர்த்தம் கிடையாது.
கிட்டும்வரை எட்டுவோம்.
உயிரெனப்படுவது மானம்.
அதையிழந்து வாழ்வதென்பது சாவுக்குச்சமம்.
பெரும்புயலில் அல்லாடுகிறது எம்போர்ப்படகு.
கரையேறக் கயிறெறியுங்கள்.
உலகத் தமிழினமே!
உன்போர் இது ... உனக்கான போரிது.
முழக்கம் இங்காகட்டும்.
முரசு உனதாகட்டும்.
எம்மைக் காசுக்கு யாசிக்கவிடாதே.
வாரிவழங்கு.
தாங்கும் தோள்களிலொர்ன்று உன்தோளுமாகட்டும்.
மூட்டம் போட்ட மேகத்தைக் கலைத்து
உரிமைப் போருக்கு ஊட்டம்கொடு.
வாழ்ந்தான் தமிழனென வரலாறு எழுதப்படும்போது
முன்னுரையிலே உன்பெயர் இருக்கட்டும்.
பரணிக்கு நாயகர்களைப் பாட
உலகெங்குமிருக்கும் புலவர்களே எழுக.
பொய்மைத்திரி அணைந்து போக
உண்மையை வாயால் ஊதுங்கள்.
சத்தியமே ஜெயம்.



சூரியன் யாருக்கும் சேவகம் செய்தவர்
கால்களிற் பூசைகள் செய்யாது.
போரினிலே பிரபாகரன் சேனைகள்
சாவினுக்கஞ்சியே ஓடாது.

○